விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: பன்னிரண்டு ═══ Valampurii ═══

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2039 புரட்டாதி 17 வெள்ளிக்கிழமை (03.10.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 289




# அரசியல்துறைச் செயலகம் மீது விமானப் படையினர் தாக்குதல்

## ★ஆறு பொதுமக்கள் பலி; 16 பேர் படுகாயம்★
## சமாதான செயலகம் மீதும் குண்டுகள் வீழ்ந்தன

(கிளிநொச்சி)

கிளிநொச்சி நகரின் மையப் பகுதியில் அமைந்திருந்த விடுதலைப்புலிகளின் அரசியல்துறை மற்றும் சமாதான செயலகங்களின் மீது நேற்று வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் விமானப் படையினர் நடத்திய குண்டு வீச்சுத் தாக்குதலில் அந்த செயலகங்கள் அழிந்துள்ளதாகவும் 6 பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளதுடன் 16 பேர் படுகாயமடைந்துள்ளதாகவும் விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளனர். (12 ஆம் பக்கம் பார்க்க)



வன்னிக்கு எடுத்துச் செல்வதற்கான உணவுப் பொருள்களுடன் ஐ.நாவின் வாகனத் தொடரணி வவுனியாவில் காத்திருப்பதைப் படத்தில் காணலாம்.

### ஒரு வாரத்துக்குத் தேவையான பொருள்களுடன்
## ஐ.நாவின் உணவு வாகன அணி நேற்று வன்னி சென்றடைந்தது

(வவுனியா)

வன்னிப் பிரதேசத்தில் இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கு விநியோகிப்பதற்காக சுமார் 3 வாரங்களின் பின்னர் உலக உணவுத் திட்டத்தின் முதல் தொகுதி உணவுப் பொருள்கள் நேற்று 51 லொறிகள் மூலம் வவுனியாவிலிருந்து அனுப்பி வைக்கப்பட்டன.

இவற்றில் அரிசி, சீனி, மா மற்றும் மரக்கறி எண்ணெய் போன்றன அனுப்பப்பட்டுள்ளன. வவுனியா-கண்டி வீதியிலுள்ள உலக உணவுத் திட்ட நிறுவனத்தின் களஞ்சியசாலையில் இராணுவம் மற்றும் பொலிஸாரின் முன்னிலையில் மிகவும் தீவிரமாகச் சோதனையிடப்பட்ட லொறிகளில் இந்தப் பொருள்கள் ஏற்றப்பட்டு வண்டிகள் சீல் வைக்கப்பட்டு இராணுவத்தின் வழித்துணையுடன் ஓமந்தைச் சோதனைச் (12 ஆம் பக்கம் பார்க்க)

### ☞ உள்ளே...
### தரிசனம்

தேசிய உடை,
அரச இலட்சனை
தொடர்பான மூவின
மக்களின் கருத்துக்
களம்

## பாதுகாப்புச் செலவீனமாக 177 பில். ரூபாய் ஒதுக்கீடு

(கொழும்பு)

2009ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் பாதுகாப்புச் செலவீனங்களுக்கென 177.1 பில்லியன் ரூபா ஒதுக்கப்படவிருப்பதாக நிதியமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள பகிர்வுக் கணக்கறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

படையினரின் நாளாந்த செலவீனங்கள் மற்றும் படையினரின் கொடுப்பனவுகள், இதர செலவுகளுக்கே இதில் பெரும் பகுதி பயன்படுத்தப்படவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

158.4 பில்லியன் ரூபா மீண்டெழும் செலவுகளுக்கும் (12 ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சி நகரை நோக்கி அகோர எறிகணை வீச்சு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி நகரத்தின் மீது படையினர் நேற்று இரவு செறிவான எறிகணைத் தாக்குதலை நடத்தியுள்ளனர்.

கிளிநொச்சி நகரின் மத்திய பகுதி வரையான பகுதிகளில் செறிவாக நூற்றுக்கணக்கில் நேற்று இரவு எறிகணைத் தாக்குதல் நடத்தினர்.

நூற்றுக்கணக்கில் ஆட்லறி எறிகணைகளும் பல்குழல் வெடிகணைகளும் வீழ்ந்து வெடித்துள்ளதாக வன்னித் தகவல்கள் தெரிவித்தன. இவ் எறிகணைத் தாக்குதலால் பெருமளவில் மக்களின் வாழ்விடங்கள், வணிக நிலை (12 ஆம் பக்கம் பார்க்க)

## இடம்பெயர்ந்துள்ள தமிழ் மக்கள் மீது அரசாங்கத்துக்கு அக்கறை அதிகம்
### அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கில் உக்கிரமடைந்துள்ள மோதல்கள் காரணமாக இடம்பெயர்ந்துள்ள 2 இலட்சம் தமிழ் சகோதர, சகோதரிகள் தொடர்பில் சர்வதேச நாடுகள் மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்களை விடவும் எமக்கு அக்கறை அதிகம் என்று அமைச்சரும் தேசிய பாதுகாப்பு விவகாரங்களுக்கான பேச்சாளருமாகிய ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

அதனாலேயே இவ்வாறு இடம்பெயர்ந்த மக்களுக்கு 800 மெற்றிக்தொன் உலர் உணவுப் பொருள்களை அனுப்ப அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. அந்த நடவடிக்கைகள் இன்று (நேற்று) முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் (12 ஆம் பக்கம் பார்க்க)

## கொக்குவில் பகுதியில் வேட்டுச் சத்தம்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் சந்திக்கு அண்மித்த பகுதியில் நேற்றிரவு 6.45 மணியளவில் சுமார் 5 நிமிட நேரம் சரமாரியான துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் கேட்டன.

மின்சாரம் தடைப்பட்டிருந்த வேளை குண்டுவெடிப்புச் சத்தம் கேட்டதாகவும் இதனையடுத்து வேட்டுச் சத்தங்கள் கேட்டதாகப் பிரதேச தகவல்கள் தெரிவித்தன. எனினும் சம்பவம் தொடர்பான மேலதிக தகவல்கள் எவையும் தெரிய வரவில்லை. (எ)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்





வீதிப் போக்குவரத்து சட்டங்களை அமுலாக்குவது தொடர்பாக நேற்று யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெற்ற கருத்தரங்கில் கலந்து கொண்ட பிரமுகர்களையும் பொதுமக்களையும் படங்களில் காணலாம்.

## தவறான செய்தி

(யாழ்ப்பாணம்)

வலம்புரியில் கடந்த முதலாம் திகதி 2ஆம் பக்கத்தில் 'பணமோசடியில் ஈடுபட்ட மாணவிக்கு விளக்கமறியல்' என்ற தலையங்கத்தில் வெளியான செய்தியில்,

யாழ். போதனா வைத்தியசாலையின் கணக்காளரை எதிர்வரும் 10 ஆம் திகதி நீதிமன்றிற்கு சமுகமளிக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது என பிரசுரிக்கப்பட்டுள்ளமை தவறானதாகும்.

யாழ். வைத்தியசாலை கணக்காளரையே அன்றைய தினம் நீதிமன்றில் ஆஜராகுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. (ச)

# கொக்காவில் ரயில் நிலையமருகே இராணுவம் நிலை கொண்டுள்ளது

## இராணுவப் பேச்சாளர் தகவல்



(கொழும்பு)

கொக்காவில் ரயில் நிலையம் அருகிலேயே இராணுவம் தற்போது தனது நிலையிலுள்ளது.

அண்மையில் மாங்குளத்திலிருந்து 7 கிலோ மீற்றர் தொலைவில் அமைந்துள்ள விடுதலைப் புலிகளின் விமானப் படைத் தளத்தை இராணுவத்தினர் கைப்பற்றியுள்ளனர்.

ஏ-9 பாதையின் வடக்கே அமைந்துள்ள முல்லைத்தீவு பகுதியின் தாண்டியிருப்புக்குளம் பகுதியில் நூறுக்கு எண்பது வீதமான பகுதியை இராணுவத்தினர் கைப்பற்றியுள்ளனர் என இராணுவப் பேச்சாளர் உதய நாணயக்கார தெரிவித்துள்ளார்.

அதேபோன்று நாயாறு வடக்கு மற்றும் கிழக்குப் பகுதியில் இராணுவ நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இப்பகுதியில் அமைந்துள்ள வன் போர் பேஸ் உட்பட விடுதலைப் புலிகளுக்குச் சொந்தமான 7 முகாம்களை இராணுவம் கைப்பற்றியுள்ளது.

கடந்த இரு வாரங்களுக்குள் கெஸ்ரோ திஸாம் ஆகிய பேரில் அமைந்துள்ள விடுதலைப் புலிகளின் முக்கிய முகாம்களை இராணுவம் தன்வசப்படுத்தியுள்ளது என நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இராணுவப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் முகமாலை நாகர்கோவில் பகுதியில் அமைந்துள்ள விடுதலைப் புலிகளின் பதுங்கு குழிகள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது.

இதில் விடுதலைப் புலிகளின் நான்கு உறுப்பினர்கள் வரை கொல்லப்பட்டுள்ளதுடன் ஐந்து பேர் வரை காயமடைந்துள்ளதாகவும் மூன்று இராணுவ வீரர்கள் வரை காயமடைந்துள்ளதாகவும் இதனையடுத்து நடத்தப்பட்ட தேடுதலில் ரி-56 ரக ஆயுதங்கள் மற்றும் வெடிபொருட்கள் இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

வவுனியா,பாலமோட்டை, தாண்டிக்குளம் பகுதியில்இராணுவத்தினர் நடத்திய தாக்குதலில் 10 விடுதலைப் புலிகள் கொல்லப்பட்டுள்ளதாகவும் 14 பேர் வரை காயமடைந்தும் உள்ளனர்.

இதனையடுத்து இப்பகுதியில் இராணுவத்தினர் நடத்திய தேடுதலின்போது விடுதலைப் புலி உறுப்பினர் ஒருவரது சடலமும் கைக்குண்டு மற்றும் தகவல் பரிமாற்று கருவிகள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தில் பண்டாரிக்குளம், கனகராயன்குளம், இரணைமடுக்குளம் பகுதியின் வடக்கு, தெற்கு வன்னிக்குளம் பகுதியில் மோதல்கள் இடம்பெற்றன.

இதில் 18 விடுதலைப் புலி உறுப்பினர்கள் வரை கொல்லப்பட்டுள்ளதுடன் 8 பேர் காயமடைந்துள்ளனர். இதில் 6 இராணுவ வீரர்களும் காயமடைந்துள்ளனர்.

முல்லைத்தீவு பகுதியில் நாயாறு தாண்டியிருப்புக்குளம் பகுதியில் இடம்பெற்ற மோதலில் மூன்று விடுதலைப்புலிகள் வரை கொல்லப்பட்டுள்ளனர்.

இதேவேளை வன்னிப் பகுதியில் மக்களுக்காக கொண்டு செல்லப்பட்ட அத்தியாவசிய பொருட்கள் அனுப்பப்பட்ட லொறிகளில் இருந்து சில ஆயுதங்கள் கண்டு பிடிக்கப்பட்டன.

2.5 கிலோக்கிராம் சி-4 வெடிபொருட்கள் 22 ஜி பி எஸ் அடங்கிய உபகரணங்கள் கைப்பற்றப்பட்டது என இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார்.

மேலும் இராணுவத்திற்கு ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதில் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு பயிற்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

44 ஆயிரம் பேரை இராணுவத்திற்கு சேர்த்துக் கொள்ள உத்தேசித்துள்ளோம். 2701 பேரை இராணுவத்தினர் கைது செய்துள்ளனர். 819 பேர் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டு சிறைவைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த மாதம் தொடக்கம் 78 விடுதலைப் புலிகளின் சடலங்களை இராணுவத்தினர் கண்டெடுத்துள்ளனர். இவ்வருடத்தில் 476 விடுதலைப் புலிகளின் சடலங்களை படையினர் கைப்பற்றியுள்ளனர்.

கொழும்பில் பல இடங்களில் கடந்த இரு வாரங்களாக குண்டு வெடிப்பு சம்பவங்கள் இடம்பெற்றன.

பாரிய அளவில் இடம்பெற இருந்து உயிர்ச் சேதங்களை இராணுவத்தினர் வழங்கிய பாதுகாப்பு நடவடிக் கையினால் தவிர்க்கப்பட்டது எனக் கூறலாம் எனவும் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார இவ் ஊடகவியலாளர் மாநாட்டில் மேலும் தெரிவித்தார். (ச-5)

## மாணவர்களின் பெற்றோர்கள் யாழ்.அரச அதிபருடன் சந்திப்பு

5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் புள்ளியிடலால் பாதிக்கப்பட்ட மாணவர்களின் பெற்றோர் பிரதிநிதிகள் நேற்று யாழ். அரச அதிபர் க.கணேஷ், யாழ். பல்கலைக் கழகத் துணைவேந்தர் என்.சண்முகலிங்கன், யாழ். வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் ஆகியோரைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர் ரி.கணேசலிங்கம், வைத்தியர் கே.சிறிதரன் ஆகியோர் தலைமையிலான ஐவர் அடங்கிய குழுவினர் இக்கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

மாணவர்களின் விடைத்தாள்கள் திருத்தப்பட்டு மேற்கொள்ளப்பட்ட புள்ளியிடலை மீளாய்வு செய்வதற்கு உரிய தரப்பினருடன் கலந்துரையாடுமாறு இச்சந்திப்பின்போது வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை புள்ளியிடலை மீளாய்வு செய்வது தொடர்பாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உரையாடியுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (ச)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



குலேந்திரன் பனுசிகா
125 புள்ளிகள்
(யா/கோப்பாய் மகா வித்தியாலயம்)



சசிகுமார் கஜந்தன்
117 புள்ளிகள்
(யா/கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம்)

2008ஆம் ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த இவர்களைப் பாராட்டுவதோடு மேலும் பல வெற்றிகளைப் பெற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:- இரத்தினம் –புஸ்பராசா (மாமா/பெரியப்பா)
அகிலேஸ்வரி, டயானி, கோபிதாசன், யசிந்தினி

(1789)

## திருமறைக் கலாமன்றம்

கலைத்தூது அழகியல் கல்லூரி
நடத்தும்

# இசையே வாழி

(கூட்டுப் பிரார்த்தனை)
(நாளை)

காலம்:- 04.10.2008 சனிக்கிழமை
நேரம்:- மு.ப .10.00 மணி -12.00 மணி
இடம்:- கலைத்தூது கலையகம், 286, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

பிரவேசம் இலவசம்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

–திருமறைக் கலாமன்றம்

238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

(C-1627)

## தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

### விண்ணப்பம் கோரல்

1.தேவஸ்தான எழுதுவினைஞர்:-
கணனித்துறையில் அறிவுடையவராகவும், கணக்கியல் துறையில் அனுபவமுடையவராகவும் இருத்தல் வேண்டும்.
*வயதெல்லை:- முப்பது வயதுக்கு மேல் 65 வரை*

2.தேவஸ்தான களஞ்சியப் பொறுப்பாளர்:-
இத்துறையில் அனுபவமுடையவர்கள் விண்ணப்பிக்கலாம்.
*வயதெல்லை:- முப்பது வயதுக்கு மேல் 65 வரை*

3. நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபம் நிர்வாக அலுவலர்:-
இப்பதவிக்கு பொருத்தமானவர்கள் விண்ணப்பிக்கலாம்.
*வயதெல்லை:-நாற்பது வயதுக்கு மேல் 65 வரை*

மேற்படி விண்ணப்பதாரிகள் தமது சுய விபரங்களுடன் சமயப் பெரியார்கள், கிராம அலுவலர் போன்றவர்களின் நற்சான்றுடன் 10.10.2008 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பம் செய்யவும்.

தலைவர்,
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

(C-1628)


## ஊழியர் சங்க தலைவர் தெரிவு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தின் தலைவராக ச.க.தனேந்திரன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

நேற்று யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடைபெற்ற ஊழியர் சங்கத்தின் வருடாந்த பொது கூட்டத்திலேயே அவர் ஏக மனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். (ச)

# இன்று ஒரு தகவல்

## கொடுத்ததை வாங்கக்கூடாது!

புதுக்கோட்டைக்குப் பக்கத்தில் மிதிலைப்பட்டி என்று ஒரு ஊர் இருந்தது.

அங்கே அழகிய சிற்றம்பலக் கவிராயர் என்ற ஒருவர் இருந்தார்.

ஒருநாள் அவர் கல்யாண வைபவம் ஒன்றில் கலந்து கொள் வதற்காக இன்னொரு ஊருக்குச் சென்றார்.

கல்யாணம் முடிந்ததும் ஊருக்குத் திரும்ப ஆயத்தமானார். ஒரு இரவு முழுவதும் பயணம் செய்தால் தான் இவரது ஊருக்கு போகலாம்.

ஒரு வண்டியை வாடகைக்குப் பிடித்தார். வண்டிக்காரனைப் பார்த்து "எவ்வளவு வாடகை?"

என்று கேட்டார்.

"மூன்று ரூபாய் வாடகை கொடுங்கள்! ஊருக்குப் போய்ச்சேரும் போது பொழுது விடிந்துவிடும் அதனால் நாளைக்கு காலையில் சாப்பாடு கொடுங்கள் அதுபோதும்" என்றான்.

சரி என்று ஒத்துக் கொண்டார்.

வண்டியும் புறப்பட்டது கவிராயர் அதில் நன்றாக நீட்டி நிமிர்ந்து படுத்துக் கொண்டார். நல்ல நிலா வெளிச்சம்.

வண்டிக்காரனும் ஆனந்தமாக தெம்மாங்கு பாடிக்கொண்டே போனான்.

கவிராயரும் சுவாரசியமாக அதைக் கேட்டுக் கொண்டே போகிறார்.

வண்டிக்காரன் பாட்டை நிறுத்திவிட்டு, மெதுவாக கவிராயரிடம் பேச்சுக் கொடுத்தான்.

"நீங்கள் யார்? உங்களைப்பற்றி கொஞ்சம் சொன்னால் நான் கேட்டுக் கொண்டே வருவேன்!" என்றான்.

கவிராயரும் தனது கதையை சொல்ல ஆரம்பித்தார்.

"நான் இருக்கிறது மிதிலைப்பட்டிதான். எங்கள் முன்னோர் களெல்லாம் பெரிய வித்துவான்கள்.

ஆரம்பத்தில் அவர்கள் சேலத்துக்குப் பக்கத்தில் ஒரு ஊரில் இருந்தார்கள்.

அந்த காலத்தில் இந்தப் பக்கத்தில் வெங்களப்ப நாயக்கர் என்ற ஜமீன்தார் இருந்தார்.

அவர்தான் மிதிலைப்பட்டி கிராமத்தை எங்களிடம் கொடுத்தார். இப்பொழுது எங்களுக்கு ஜீவாதாரமாக இருப்பது அதுதான். இன்றைக்கு கஷ்டமில்லாமல் இருக்கிறோம் என்றால் அதற்குக் காரணம் வெங்களப்ப நாயக்கர் தான்.

என்று சொல்லிக் கொண்டு வந்தார்.

பொழுது விடிந்தது. மிதிலைப்பட்டியும் வந்து சேர்ந்தது கவிராயர் இறங்கினார்.

வீட்டு வேலைக்காரனைக் கூப்பிட்டு "வண்டிக்காரனுக்குப் பழையது கொண்டுவந்து கொடு" என்றார்.

அப்பொழுது வண்டிக்காரன், "ஐயா, எனக்கு சாப்பாடு வேண்டாம். நான்போய் வருகிறேன். உத்தரவு கொடுங்கள்!" என்றான்.

"நீ ஊருக்குப் போய்ச் சேர்வதற்குள் ரொம்ப நேரமாகிவிடும் சாப்பிட்டுப் போ!" என்றார்.

"எனக்குப் பசி இல்லை!" என்றான் அவன்.

"சரி... இந்தா வண்டி வாடகை!" என்று சொல்லி மூன்று ரூபாய் கொடுத்தார்.

"இது உங்களிடமே இருக்கட்டும். நான் வருகிறேன்" என்று கிளம்பினான் அவன்.

"இன்னும் அதிகமாக வேண்டுமா?" என்றார் அவர்.

"அதெல்லாம் ஒன்றுமில்லை! நீங்கள் தவறாக நினைக்க கூடாது!" என்று சொல்லி விட்டு கம்பீரமாக கிளம்பினான் அவன்.

"என்ன காரணம் என்றாவது சொல்லி விட்டுப் போ!" என்றார் கவிராயர் அப்பொழுது தான் வண்டிக்காரன் சொன்னான்

"ஐயா நேற்று ராத்திரி உங்கள் முன்னோர்களைப் பற்றி சொல்லிக் கொண்டு வந்தீர்களே! அவர்களை ஆதரித்த வெங்களப்ப நாயக்கர் பரம்பரையில் பிறந்தவன் தான் நான்!"

ஏதோ என் தலைவிதி இப்பொழுது வண்டி ஓட்டிக்கொண்டிருக் கிறேன்! எங்கள் வீட்டுப் பெரியவர்கள் என்ன சொல்வார்கள் என்றால், என்னதான் ஆனாலும் சரி... கொடுத்ததை மட்டும் வாங்கக்கூடாது!" என்று சொல்வார்கள். "எங்கள் முன்னோர்கள் உங்களுக்குக் கொடுத்ததிலிருந்து ஒரு சின்ன துரும்பைக் கூட திருப்பி வாங்குவதற்கு என் மனம் இடம் கொடுக்கவில்லை! மன்னித்துக் கொள்ளுங்கள்!

ஏதோ இந்த அளவுக்காவது நான் உங்களுக்கு உபயோகப்படுவது மாதிரி கடவுள் கருணை செய்தாரே! அது எனது பாக்கியம்!" என்று சொல்லிவிட்டு அந்த ஆள் போய்விட்டான்.

இது கற்பனைக்கதையில்லை! நிஜமாக நடந்தது! இந்த சம்பவத்தை அந்த கவிராயரே சொல்லியிருக்கிறார்.

இந்த குறிப்பை ஒரு புத்தகத்தில் பார்த்தேன்.

அதை என் நண்பரிடம் கொடுத்து படித்துவிட்டுக் கொடுங்கள் என்றேன்.

வாங்கியவர் திருப்பி அந்த புத்தகத்தை தரவேயில்லை ஒருநாள் "என்ன படித்து விட்டீர்களா?" என்றேன்.

"படித்துப் பார்த்தேன். வெங்களப்ப நாயக்கர் பரம்பரை மாதிரி நானும் ஒரு முடிவுக்கு வந்து விட்டேன்" என்றார்.

"என்ன அது?" என்றேன்

"கொடுத்ததை திருப்பி வாங்கக் கூடாது என்பது அவர்களது கொள்கை. வாங்கியதை திருப்பிக் கொடுக்கக் கூடாது என்பது எனது கொள்கை!" என்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# பல்நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள் வடக்குக் கிழக்கில் அதிகம் -சுகாதார அமைச்சு

(கொழும்பு)

அரசாங்கம் நாடளாவிய ரீதியில், 400 பல் வைத்தியர்களை நியமிக்க கோரிக்கை விடுத்துள்ள போதும், பொதுச்சேவைகள் ஆணைக்குழு 111 நியமனங்களை மாத்திரமே வழங்கியுள்ளது. இது ஏற்றுக்கொள்ளத்தக்க செயலல்ல எனக் கூறும் சுகாதார அமைச்சர் நிமல் சிறி பால டி சில்வா, நாட்டின் ஏனைய இடங்களை காட்டிலும், வடக்கு கிழக்கில், பல் வைத்தியர்களுக்கு பாரிய வெற்றிடங்கள் காணப்படுவதாகக் குறிப்பிட்டார். அத்துடன் இலங்கையின் வடக்கு, கிழக்கில் ஏனைய இடங்களை காட்டிலும், பல் நோய்கள் அதிகரித்துக் காணப்படுவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தின் சுகாதார நலன் திட்டங்கள் ஒரு காலத்தில் முன்னேற்றமாக இருந்தபோதும் தற்போதைய யுத்த சூழ்நிலை காரணமாகவே பல் நோய்கள் உட்பட்ட பல சுகாதார பின் விளைவுகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். (அ-6)

# சமாதானம் எனக் கூறிக்கொண்டு யுத்தம் சுயலாபம் தேடும் அரசியல்வாதிகளுக்கே அன்றி நாட்டு மக்களுக்கல்ல -ஜே.வி.பி,எம்.பி.பிமல் ரத்நாயக்கா தெரிவிப்பு

(கொழும்பு)

ஒரு கையில் யுத்தத்தையும் மறுகையில் சமாதானத்தையும் ஏந்திக்கொண்டு இரட்டைவேடம் போடும் சிறந்த நாடகக் கலைஞர்கள் எமது அரசியற்துறையில் உலா வருகின்றனர்.

உலகளவில் கூட பலநாடுகளில் சமாதானம் எனக் கூறிக்கொண்டு யுத்தத்தை நடத்தி வருகின்றனர். இறுதியில் சமாதானத்திற்கு பதில் யுத்தத்தின் கோர விளைவுகளையே மக்கள் அனுபவிக்க நேரிடும் ஜே.வி.பியின் பாராளுமன்ற உறுப்பினரும் சமாதானம் மற்றும் ஒத்துழைப்புக்கான அமைப்பின் தலைவருமான பிமல் ரத்நாயக்க தெரிவித்தார். உலக சமாதானப் பேரவையின் இலங் கைக் கிளையான சமாதானத்திற்கும் ஒத்துழைப்புக்குமான அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விசேட கருத்தரங்கு கடந்த செவ்வாய்க்கிழமை மாலை கொழும்பு மகாவலி கேந்திர நிலை யத்தில் இடம்பெற்றபொழுது அதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே பிமல் ரத்நாயக்க எம்.பி. இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் தொடர்ந்தும் உரைநிகழ்த்துகையில் கடந்த காலங்களிலும் எமது அமைப்பினால் பல்வேறுபட்ட கருப் பொருள்களில் பல கலந்துரையாடல்கள் நிகழ்த்தப் பட்டிருக்கின்றன. குறிப்பாக சிங்கள, தமிழ், இஸ்லாமிய மக்கள் மத்தியில் இன ஒருமைப்பாடும் சமவுரிமைகள் குறித்தும் மிக ஆழமாக எமது அமைப்பால் அலசி ஆராயப் பட்டன.

இலங்கையில் இன்று யுத்தமானது கோரத்தாண்டவமாடிக் கொண்டிருக்கும் நிலையில் எமது ம்க்கள் மத்தியில் இன ஒருமைப் பாட்டினையும் ஐக்கியத்தினையும் கட்டியெழுப்புவது காலத்தின் கட்டாய தேவையாகும். அதற்காக எமது சமாதானம் மற்றும் ஒத்துழைப்புக் கான அமைப்பு மிகவும் பாடுபட்டு வருகின்றது. எமதுநாட்டிலும் சர்வ தேச நாடுகளிலும் யுத்தத்தை நடத்துபவர்கள் சமாதானத்தை ஏற்படுத் துவதற்காகவே யுத்தம் நடத்தப் படுவதாக கூறுகிறார்கள். அப்படியானால் சமாதானத்திற்காகவா கிளிநொச்சி யுத்தம்? சமாதானத்திற் காகவா ஈராக் யுத்தம்? எனக் கேட்கத் தோன்றுகிறது.

எமது நாட்டில் சகல இன, மத மக்களும் வெவ்வேறுபட்டு துருவமயமாக நில்லாமல் ஓரணியில் திரளவேண்டும். இன்று யுத்தம் தேவைப்படுவது சுயலாபம் தேடும் குறிப்பிட்ட சில அரசியல்வாதிகளுக்கே அன்றி நாட்டு மக்களுக்கல்ல. இதனை நாம் முதலில் புரிந்து கொள்ள வேண்டும். ஐக்கிய நாடுகள் அமைப்பும் உலக நாடுகளில் சமாதானத்தை ஏற்படுத்த பல முயற்சிகளை மேற்கொண்டுள்ளது வரலாறு. அதற்காக பல சமாதான ஒப்பந்தங்களும் கைச்சாத்திடப்பட்டமை கண்கூடு. ஆனால் நடந்தது என்ன ? கைச்சாத்திடப் பட்ட சமாதான ஒப்பந்தங்கள் வெறும் ஏட்டுக்களோடு ஏட்டுக்களாக உள்ளனவேயன்றி சமாதானம் தோன்றுவதாக இல்லை.

இலங்கை போன்ற வளர்முக நாடுகளை விட ஏகாதிபத்திய நாடுகளிலேயே அதிகமாக சமாதானம், மனித உரிமை எனக்கூறிக் கொண்டு யுத்தத்தையும் நடத்திக் கொண்டு உலகை, மக்களை ஏமாற்றப் பார்க்கின்றனர்.

ஒரு சாரார் மனித உரிமை பற்றி உரத்து குரல் எழுப்பி மறுபுறம் மனித உரிமையை கீழேபோட்டு மிதிக்கின்றார்கள். இது எமது நாட்டுக்கும் பொருந்தும்.

ஒரு கையில் யுத்தத்தையும் மறு கையில் சமாதானத்தையும் ஏந்திக் கொண்டு இரட்டைவேடம் போடும் சிறந்த நாடகக் கலைஞர்கள் எமது அரசியல் துறையில் உலாவருகின்றனர். உலகளவில் கூட பல நாடுகளில் சமாதானம் எனக் கூறிக் கொண்டு யுத்தத்தை நடத்திவருகின்றனர்.

இறுதியில் சமாதானத்திற்கு பதில் யுத்தத்தின் கோர விளைவுகளையே மக்கள் அனுபவிக்க நேரிடும்.

சமாதானம், மனித உரிமை, ஜன நாயகம் குறித்து எமது நாட்டிற்கு தெ[illegible]ரிதாக உபதேசம் செய் யும் அமெரிக்க ஐக்கிய இராச்சியம் தனது நாட்டிலும் ஏனைய நாடுகளிலும் மனித உரிமை மீறல்களை உச்சக் கட்டமாக அரங்கேற்றி வருகின் றது. இத்தகைய இரட்டை வேடதாரிகளின் கபட நாடகத்தை மக்களுக்கு தெரியப்படுத்துவது ஊடகங்களின் கடப்பாடாகும் என்றார். (அ-6)

## இராசி பலன்

03.10.2008
(புரட்டாதி 17 ,வெள்ளிக்கிழமை)
விசாகம் பிற்பகல் 3.55 மணிவரை
சதுர்த்தி மாலை 5.45 மணிவரை
இராகுகாலம் 10.32-12.02 மணிவரை
சுபநேரம் 6.02-7.32 மணிவரை
சதுர்த்தி விரதம்

| | |
|---|---|
| மேடம் | பெரியோர் வெறுப்பு, வியா பார சிந்தை, காரியதாமதம், மனச் சோர்வு |
| இடபம் | வீண்பயம், எடுத்தகாரியம் தாமதமாகும், ரோகநிலை, கல்வியில் ஆர்வம். |
| மிதுனம் | காரியஅனுகூலம், தெய்வசிந் தை, பிறர் உதவி, பிரயா ணம். |
| கடகம் | கடினவார்த்தை, உறவினர் வெறுப்பு, எடுத்தகாரியம் தாமதமாகும், பணவிரயம் |
| சிங்கம் | தெய்வசிந்தை, நல்லமுயற்சி, போசனசுகம், தெளிந்த சிந்தை |
| கன்னி | உறவினர் மனஸ்தாபம், காரியதாமதம், திடீர்நன்மை, தெய்வதரிசனம் |
| துலாம் | தெய்வசிந்தை, நல்லவர வேற்பு, காரியசித்தி, தந்தை வழிஉறவு |
| விருச்சிகம் | நல்ல முயற்சி, தெய்வசிந்தை, சுபசெலவு, போசனசுகம் |
| தனுசு | பிதாசிந்தை, பிரயாணம், ரோக நிலை, அமைதிக் குறைவு |
| மகரம் | வீண்பிரச்சினை, முயற்சி தடங்கல், திடீர் நன்மை, தெய்வ சிந்தை |
| கும்பம் | குடும்பமகிழ்ச்சி, நிலைமாற் றம், பிரயாணம் நன்மை, தெய்வ தரிசனம் |
| மீனம் | பெரியோர் சந்திப்பு, உற் சாகம், சுபசெய்தி, விருந்து பசாரம் |

வளவன்

# கிங்ஸ்லி டி.விக்கிரமரத்ன காலமானார்!



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான கிங்ஸ்லி டி விக்கிரமரத்ன காலமானார். சுகயீனம் காரணமாக கொழும்பு தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே அவர் நேற்று முன்தினம் மாலை காலமானார். 1939 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 3 ஆம் திகதி பிறந்த இவர் 1974 ஆம் ஆணடு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இணைந்து அக் கட்சியில் பல்வேறு பதவிகளையும் வகித்துள்ளார்.

1978 ஆம் ஆண்டில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உதவிச் செயலாளராக பதவியேற்ற இவர், 1989 ஆம் ஆண்டு முதன் முதலாக பாராளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்டார். பின்னர் 1994 ஆம் ஆண்டு நடந்த பொதுத் தேர்தலில் கொழும்பு மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி போட்டியிட்டு பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க[illegible]வின் தலைமையிலான பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்[illegible]தில் வர்த்தக, வாணிப மற்றும் உண[illegible]வு அமைச்சராக நியமனம் பெற்ற [illegible] இவர் 2001 ஆம் ஆண்டில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உப[illegible]தலைவராகவும் தென் மாகாண ஆ[illegible]ளுநராகவும் பதவி வகித்தார். (அ-6)

## 'இசையே வாழி' கூட்டுப்பிரார்த்தனை

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது அழகியல் கல்லூரியின் ஏற்பாட்டில் நடைபெறும் "இசையே வாழி" என்னும் கூட்டுப் பிரார்த்தனை நிகழ்வு நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிதொடக்கம் நண்பகல் 12 மணிவரை கலைத்தூது கலையகத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு கலைத்தூது அழகியல் கல்லூரியினர் வேண்டுகோள் விடுத்துள்ளார்கள். ஓ

## சைவ சிறுவர் இல்லத்தில் நவராத்திரி விழா

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலியில் அமைந்துள்ள சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் சைவ சிறுவர் இல்லத்தில் நவராத்திரியை முன்னிட்டுத் தினமும் சிறப்புச் சொற்பொழிவு இடம்பெற்று வருகிறது.

சிறுவர் இல்ல மாணவர்களின் கூட்டுப் பிரார்த்தனை, கலை நிகழ்வுகளைத் தொடர்ந்து நவராத்திரி தொடர்பான சொற்பொழிவுகள் இடம்பெறுகின்றன.

இச்சொற்பொழிவுகளை கோப்பாய் றோ.க.த.பாடசாலை அதிபர் ச.லலீசன், யாழ். பெரியபுலம் மகாவித்தியாலய ஆசிரியர் பா.பாலகணேசன்,நல்லூர் பிரதேச செயலக அலுவலர் கு.பாலசண்முகன், உளவளத் துணையாளர் நா.நவராஜ் ஆகியோர் ஆற்றி வருகின்றனர். ஓ

## மரியசேவியர் அடிகளாருக்கு 'கலைக்காவலர்' விருது

(யாழ்ப்பாணம்)

நீர்கொழும்பு இந்து இளைஞர் மன்றத்தின் 75 ஆவது ஆண்டு பவளவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை கொண்டாடப்பட்ட போது திருமறைக் கலாமன்றத்தில் இயக்குநர் அருட் திரு நீ.மரியசேவியர் அடிகளார் கலைத்துறைக்கு ஆற்றிய சேவைகளை பாராட்டி "கலைக்காவலர்" என்னும் பட்டமும், விருதும் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை எதிர்வரும் 6ஆம் திகதி திங்கட்கிழமை மாலை கொழும்பு பண்டார நாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மண்டபத்தில், கிறிஸ்தவ விவகார அமைச்சு நடத்தவுள்ள இலக்கிய விழா-2008 இல் தமிழ் இலக்கியத்துடனான கிறிஸ்தவத்திற்கு ஆற்றிய பங்களிப்புக்கான 2007 ஆம் ஆண்டுக்கான விருதும் மரியசேவியர் அடிகளாருக்கு வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. ஓ

## சர்வதேச நல்லொழுக்க தினம்

வடமராட்சி நல்லொழுக்க நிறுவனம், சக்தி நிறுவனம்,தீபம் அமைப்பு ஆகியன இணைந்து போரூட் நிறுவன அனுசரணையுடன் நடாத்தும் சர்வதேச நல்லொழுக்க தினம் இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு, யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் அமைந்துள்ள நாவலர் மண்டபத்தில் யாழ்.போரூட் நிறுவன மாவட்ட உதவி நிகழ்ச்சித் திட்ட முகாமையாளர் தெ.பாலசுப்பிரமணியம் தலைமையில் "மதுவிலக்கு, சமாதானம், சகோதரத்தும்" எனும் விடயங்களைக் கருப்பொருளாகக் கொண்டு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் அகில இலங்கை சைவக் குருமார் அர்ச்சகர் சபை செயலாளர் ச.சிவமகாலிங்கக் குருக்கள்,யாழ். மறைமாவட்ட கல்வி இயக்குநர் அருட்பணி எஸ்.ஏ.ஜோர்ஜ் ஆகியோர் ஆசியுரை வழங்குவர்.

பிரதம விருந்தினராக யாழ் .அரசாங்க அதிபர் க.கணேஷ்,சிறப்பு விருந்தினர்களாக யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை,யாழ்.பால்நிலை சார் துஷ்பிரயோக செயற்குழு உறுப்பினர் எவ்.ஆர். றஜனி, கௌரவ விருந்தினர்களாக யாழ். உளநல சமூக உத்தியோகத்தர் எஸ்.இரவீந்திரன், யாழ்.பிரதேச செயலக திட்டமிடல் பணிப்பாளர் மு.மகேஸ்வரன்,யாழ். தேவை நாடும் மகளிர் அமைப்பு இணைப்பாளர் திருமதி கிருபா தனேஷ், யாழ். மேற்கு போரூட் திட்ட இணைப்பாளர் எல்.ஆர்.துஷாந் நெல்லியடி இணைப்பாளர் ஆ.குலநாதன் ஆகியோர் கலந்து சிறப்பிக்க உள்ளனர்.

மதிய இடைவேளையின் பின்னர் சிறுவர் நடனம், நாடகம் ஆகியவற்றுடன் இறுதியாக நாடகம் தொடர்பான கலந்துரையாடலும் இடம்பெறும். ஓ

## விலங்கு விசர் நோய் தொடர்பான நலத்துறைச் செய்திகள்-நாள் 6

**தடுப்பூசிக்கான நிபந்தனைகள்**

◆ ஆபத்துக் கூடிய நிலைமைகளின் போது உடனடியாகவே உரிய முதலுதவியை செய்த பின் வைத்திய ஆலோசனை பெற்று உரிய தடுப்பு மருந்துகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

◆ ஆபத்துக் குறைவான நிலைமைகளின் போது உரிய முதலுதவியுடன் வைத்திய ஆலோசனையைப் பெற்றுக்கொள்வதுடன் விலங்கினை 14நாட்கள் அவதானித்து மாறுபாடான அறிகுறிகள் தென்பட்டால் அல்லது சுகவீனமுற்றால் உடனடியாக உரிய தடுப்பு மருந்துகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

**விலங்கொன்றினால் கடியுண்டால் செய்ய வேண்டிய உடனடி முதலுதவி**

◆ காயத்தை நன்றாக 5 நிமிடம் வரை ஓடும்நீரில் கழுவவும்.

◆ பின் சவர்க்காரமிட்டு நீரினால் கழுவவும்.

◆ தொற்று நீக்கியை பாவித்து துடைக்கவும்.

◆ இயன்றளவு விரைவாக வைத்திய ஆலோசனையுடன் தடுப்பு மருந்தை உரிய ஒழுங்கில் பூரணமாகப் பெறவும். ஓ

## 'பூவாகிய புயல்' நாடகம்

(யாழ்ப்பாணம்)

கத்தோலிக்கத் திருச்சபையினால் இவ்வாண்டில் சிறப்பிக்கப்படும் தூய பவுலின் ஆண்டினை முன்னிட்டு, தூய பவுலின் வாழ்க்கைப் பயணத்தை எடுத்துக் கூறும் "பூவாகிய புயல்" என்னும் பக்தி இசை, உரை நாடகச் சித்திரமும் திருமறைக் கலாமன்றத்தின் தயாரிப்பில் நாளை சனிக்கிழமை பிற்பகல் 3.45 மணிக்கு கலைத் தூது கலையகத்தில் மேடையேற்றப்படவுள்ளது.

திருமறைக்கலாமன்றம் இவ்வாண்டில் தயாரித்து அளிக்கை செய்யும் மிகப்பெரும் நாடகங்களில் ஒன்றாக "பூவாகிய புயல்" நாடகமும் அமைகின்றது. ஓ




## பருத்தித்துறை மக்கள் வங்கியின் உற்சவ கால கருமபீடம்

பருத்தித்துறை மக்கள் வங்கியின் உற்சவ கால கருமபீடம் ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில் மேற்கு வீதியில் 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முதல் 14 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை இயங்கும்.

இக் கருமபீடத்தில் ஆலயத்திற்கு வருகை தரும் ஐந்து வயதிற்குட்பட்ட சிறார்களுக்கு மக்கள் வங்கியின் ஆரம்ப வைப்புத் தொகையுடன் சிறுவர் சேமிப்புப் புத்தகம் அன்பளிப்பாக வழங்கப்படும்.ஏற்கனவே கணக்கு உள்ளவர்களின் புத்தகங்களில் வைப்புக்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

மேலும் இங்கு மாணவர்களுக்கான சேமிப்புக் கணக்குகள் இளைஞர் யுவதிகளுக்கான YES கணக்குகள் விவசாயிகளுக்கான அறுவடை சேமிப்புக் கணக்குகள் ஜனஜய வெற்றிக்கணக்குகள், மகளிருக்கான வனிதா வாசனா கணக்குகள், வர்த்தகர்களுக்கான நடைமுறை மற்றும் முதலீட்டுச் சேமிப்புக் கணக்குகள் என்பவற்றையும் ஆரம்பித்துக் கொள்ளலாம் என பருத்தித்துறை மக்கள் வங்கி முகாமையாளர் அறிவித்துள்ளார். ஓ

## 'ஜீவநதி' எட்டாவது இதழ்

(யாழ்ப்பாணம்)

கலைஇலக்கிய சஞ்சிகையான "ஜீவநதி" யின் எட்டாவது இதழ் வெளிவந்துள்ளது.

இராஜகிருபன், சிற்பி, புருஷோத்தம ஞானி, ரிம்ஸா முஹம்மத், த.ஜெயசீலன், ஜின்னாஹ் ஏ.இக்பால், விஷ்ணுமைத்ரேயி, ஏச்.எப்.ரிஸ்னா, ந.உதயலதா ஆகியோரின் கவிதைகளும் விக்னேஸ்வரி பவநேசன், செங்கோடன், அம்மன் கிளி முருகதாஸ், ஆசி கந்தராஜா, செ.கிருஷ்ணராஜா ஆகியோரின் கட்டுரைகளும் சந்திரகாந்தா முருகானந்தன், த.கலாமணி, சி.சிவாகர், கயிலை ஆகியோரது சிறுகதைகளும் சி.மௌனகுருவுடனான நேர்காணலும் பா.இரகுவரனின் பத்தி எழுத்தும் சஞ்சிகையில் இடம்பெற்றுள்ளன.

வி.விமலன், க.பரணிதரன் ஆகியோரை இணையாசிரியர்களாகக் கொண்ட ஜீவநதி சிற்றிதழ் அல்வாய் கலைஅகம் நிறுவன வெளியீட்டு உரிமையாளர் கலாநிதி த. கலாமணியால் வெளியிடப்படுகிறது. ஓ

## அஞ்சலி அகம் நடத்தும் சர்வதேச சிறுவர் தினம்

(பருத்தித்துறை)

தும்பளை நெல்லண்டை வீதி அஞ்சலியகம் நடத்தும் சர்வதேச சிறுவர்தின நிகழ்வுகள் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு அஞ்சலியகத்தில் நடைபெற உள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக வணிகபீட முகாமைக் கற்கைகள், பேராசிரியர் ம.நடராஜசுந்தரம் கலந்து கொள்வார்.

அத்துடன் கலை நிகழ்வுகளும் அஞ்சலியகத்தால் சுனாமியால் பாதிக்கப்பட்ட 7 பாடசாலைகளிடையே நடாத்தப்பட்ட கவிதை, கட்டுரைப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களை பெற்ற மாணவர்களுக்கான பரிசில் வழங்குதலும் இடம்பெறும்.

பரிசில்களைப் பெறுவோரின் பெயர் விபரம் வருமாறு:-

**பிரிவு 01**

***கவிதைப்போட்டி***

இ.தமிழ்வாணி-நாகர்கோவில் ம.வி., வி.மேரிபௌசிகா- சென்தோமஸ், நா. வினித்தா-புற்றளை ம.வி.

***ஆங்கிலக்கவிதை***

வி.அருட்குமார்-கலட்டி றோ.க, ஸ். சர்மியூஜினா-சென்தோமஸ், ச.தீபிகா-புற்றளை ம.வி., ஸ்ரீ.கேதிகா-சிவப்பிரகாச ம.வி.

***கட்டுரைப்போட்டி***

லூட்ஸ் சுகந்தினி-சென்தோமஸ், ச.தீபிகா-புற்றளை ம.வி., இ.நிவேதினி-சித்திவிநாயகர் ம.வி, வ.றூபிகா-கற்கோவளம் மெ.மி

***பட்டிமன்றம்***

சென்தோமஸ் பாடசாலை, கலட்டி றோ.க பாடசாலை, சிவப்பிரகாச ம.வி. பாடசாலை (பங்குபற்றியோர் 3 பேர்)

**பிரிவு 02**

***கவிதைப்போட்டி***

வி.றஜீவன்-சித்திவிநாயகர்ம.வி., ந.தர்சிகா-சிவப்பிரகாச ம.வி., இ.கேதாரகௌரி-சிவப்பிரகாச ம.வி.,அ.அனிஸ்ரினி-சென்தோமஸ்.

***ஆங்கிலக் கவிதை***

செ.மேரிநிறோசிகா-சென்தோமஸ், மு.கீர்த்தனா-சித்திவிநாயர்ம.வி.,நோ.விதுசன்-கலட்டி றோ.க.,

***கட்டுரைப்போட்டி***

ச.விதுசன்-சிவப்பிரகாசம.வி., ஜெ.பிரியங்கா-சிவப்பிரகாச ம.வி., செ.மேரிநிறோசிகா-சென்தோமஸ், ப.தாட்சாயினி-புற்றளை ம.வி.

***வினாடிவினா***

கலட்டி றோ.க.பாடசாலை, நாகர்கோவில் ம.வி., சித்திவிநாயகர் ம.வி (பங்குபற்றியோர் 5 பேர்)

**பிரிவு 03**

***ஆங்கிலக்கவிதை***

மு.அபிராம்-சிவப்பிரகாச ம.வி, சி.சிவதர்சன்-சிவப்பிரகாச ம.வி., தோ.மேரிறொமி-சென்தோமஸ்.

***திருக்குறள்***

ஜெ.யதுர்சன்- சிவப்பிரகாச ம.வி., பு.தேனுஜா-சிவப்பிரகாச ம.வி., சு.சுவர்ணா-சித்திவிநாயகர் ம.வி

***குழுநடனம்***

புற்றளை ம.வி., சித்திவிநாயகர் ம.வி., கலட்டி றோ.க. (பங்குபற்றியோர் 6 பேர்)

***ஓவியப்போட்டி***

கி.யதுகோபி-சிவப்பிரகாச ம.வி., ஈ.கஜன்ராஜ்-சித்திவிநாயகர் ம.வி., இ.ருசேனிகா-புற்றளை ம.வி., ப.தயாபரன்-சிவப்பிரகாச ம.வி.

**பிரிவு 04**

***ஆங்கிலக்கவிதை***

சு.காருண்யா-புற்றளை ம.வி., கி.நிரோஜன்-கலட்டி றோ.க, இ.துசாரன்-சித்திவிநாயகர் ம.வி.

***சொல்லாக்கம்***

இ.துஷாகரன்-சித்திவிநாயகர் ம.வி., அ.பிரியதர்சா-சென்தோமஸ், பீ.யோதினி-சிவப்பிரகாச ம.வி

***குழுப்பாடல்***

சிவப்பிரகாச ம.வி. ,புற்றளை ம.வி., சித்திவிநாயகர் ம.வி (பங்குபற்றியோர் 6 பேர்) ஓ

## கட்டடங்களை அதி உச்ச பயன்பாடுள்ளவையாக்க வேண்டும்

கட்டடங்களை மட்டும் கட்டுவதனால் உண்மையான சுகாதார மேம்பாட்டை அடைந்து விட முடியாது. அக் கட்டடங்களை அதி உச்ச பயன்பாடுள்ளதாக மாற்றுவதனாலேயே சுகாதார அபிவிருத்தியை அடையலாம் என பிராந்திய சுகாதார பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ. கேதீஸ்வரன் கோண்டாவில் பிரதேச வைத்தியசாலையின் சிகிச்சை நிலைய கலந்துரையாடல் மண்டபத்தை திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். வைத்திய பொறுப்பதிகாரி கனகரட்ணம் தலைமையில் கடந்த மாதம் கோண்டாவில் பிரதேச வைத்திய சாலையின் திறப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட பணிப்பாளர் மேலும் உரையாற்றுகையில், மத்திய மருந்தகமும் மகப்பேற்று நிலையமும் ஆக இதுவரை இயங்கி வந்த இவ் வைத்தியசாலை தற்போது பிரதேச வைத்தியசாலையாக தரமுயர்த்தப்பட்டமை சிறப்பான அம்சமாகும்.


இப்போது பிரதேச வைத்தியசாலைக்குரிய வசதிகள் குறைவாக இருப்பினும் சுகாதார திணைக்களத்தால் அவற்றை எதிர்காலத்தில் பெற்று தரமுடியும். ஏனைய வேலைகளை அபிவிருத்தித் திட்டங்களை பொதுமக்களே பார்த்துக்கொள்ளவேண்டும்.அப்போதுதான் உண்மையான சுகாதாரத்தை அடையமுடியும். இன்றைய வவுனியா ஆஸ்பத்திரியும் ஆரம்ப காலங்களில் ஆதாரவைத்தியசாலையாகவே இருந்தது. அப் பகுதி மக்களின் விடாமுயற்சியினால் இன்று யாழ்.போதனாவைத்திய சாலைக்கு நிகராக சேவையாற்றுகின்றது. அதேபோல் இப் பகுதி மக்களும் இவ்விடயத்தில் கூடுதல் கவனம் செலுத்தி அபிவிருத்தியை ஏற்படுத்தவேண்டும். அதற்கு என்னாலான முழு உதவிகளையும் வழங்குவேன், என்றும் தெரிவித்தார். ஓ

## வளர்ப்பு நாய்களுக்கான விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபை எல்லைக்குட்பட்ட அரியாலை பிரதேச வளர்ப்பு நாய்களுக்கான விலங்கு விசர்நோய்த் தடுப்பூசி (A.R.V) இன்று வெள்ளிக்கிழமை காலை 9மணி முதல் 12 மணிவரை இல:01, சோமசுந்தரம் அவனியூவிலும், பிற்பகல் 2 மணி முதல் 3.30 மணிக்கு சுண்டுக்குளி சனசமூக நிலையத்திலும் வைத்து ஏற்றப்படவுள்ளது.

இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தங்களது வளர்ப்பு நாய்களுக்கு இத் தடுப்பூசியினை ஏற்றிக்கொள்ளுமாறு யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ம.மரியதாசன் கேட்டுக் கொண்டுள்ளார். ஓ



# தரிசனம்

ராவய 2

# தேசிய உடை

## தேசிய உடைக்கு நீண்ட பயணம் உண் டு

பேராசிரியர் மென்டிஸ் ரோஹணதீர

ஆரிய சிங்கள என்ற பெயர் கொண்ட தேசிய உடைக்கு நீண்டகால ஆயுள் இருக்கவில்லை. தேசிய உடை பற்றி ஆராய்வது முக்கியமானதாகும். எமது பாரம்பரிய சித்திரக் கலைகளில் இவ்வாறானதொரு உடை காணப்படவில்லை. ஆனால் உடலின் மேல் பகுதி மூடப்பட்ட தொளதொளவென்ற ஆடையினை வரலாற்றுக்கால சிங்கள மக்கள் பாவித்தமைக்கு சாட்சிகள் உண்டு. பெண்கள் ரவிக்கையும் அதற்கு மேலான க்பாயவையும் பாவித்தனர்.



கண்டிச் சிங்களப் பெண்மணி

கோல்புறூக் ஆணைக்குழு நியமிக்கப்பட்ட காலத்தில் அநகாரிக தர்மபால, பியதாச சிறிசேன போன்ற தேசப்பற்றாளர்கள் எமக்கென்று தேசிய உடையொன்று இருக்க வேண்டுமென்று வலியுறுத்தியதோடு அரசியல் நடவடிக்கைகளின் போது அதனை அணிந்தனர்.

இதன் பின்னர் பண்டார நாயக்கா போன்றோரும் ரை, கோட், உடை யை கைவிட்டு தேசிய உடையை அரசியல் நடவடிக்கைகளின் போது அணிய ஆரம்பித்தனர்.

இதனைத் தொடர்ந்து பிரபுக்கள் குழுமமும் இவ் ஆடையை நவநாகரிகமாக அணியத் தொடங்கினர். தேசிய உடை இந் நாட்டுக்கு பொருத்தமானதென்பதை இங்கு குறிப்பிட்டாக வேண்டும்.

ஆனால் தேசிய உடையை இன்றைய சமுதாயத்திடம் முன்னகர்த்திச் செல்ல முடியாதெனக் கூறமுடியும்.

உலகில் பல்வேறு பிரதேசங்களிலிருந்து அறிமுகமாகும் நவீன ஆடைக் கலாசாரம் இளைய சந்ததியினரை ஈர்க்கின்றது.

எனினும், இது தொடர்பில் அவர்களைக் குறைகூற முடியாது. 1977 இல் அறிமுகப்படுத்தப்பட்ட திறந்த பொருளாதாரக் கொள்கையில் மேற்குலகின் நன்மைகள், தீமைகள் அனைத்தும் இங்கு வியாபித்தன.

எனவே உலகில் தனிமையான நாடாக எம்மால் செயற்பட முடியவில்லை.

இதனால் தேசிய உடை உட்பட ஏனைய தனித்துவங்களை முன்னெடுப்பதற்கு இயலாமல் போனது. ஆனால் சிலர் கூறுவதுபோல தகவல் தொழில் நுட்ப வளர்ச்சி வேகம், கணனி மயமாக்கல் தோன்றியமை இதற்கு தடையாக அமைந்த தெனக் கூறமுடியாது.

இவை அறிவினை-தகவல்களை தொகுத்துக்கொள்வதற்கான உபகரணங்களாகும்.உலகின் புதிய வரவுகளை- தொழில் நுட்பத்தை- கணனிமயப்படுத்தலை ஏற்றுக் கொள்வதென்பது பழமையான பாரம்பரியங்களை கைவிடுவதற்கான காரணமென்பது விவாதத்திற்கு அப்பாற்பட்ட விடயமாகும்.

தகவல் தொழில்நுட்பத் துறையில் தாய்வான் இலங்கையை விட முன்னணியில் திகழ்கின்றது.

எம்மைவிட உலகம் அவர்களை நெருங்கியுள்ளது. அங்கும் திறந்த பொருளாதாரம் கடைப்பிடிக்கப்படுகிறது. இவ்வாறானதொரு சூழ்நிலையிலும் அவர்கள் தமது பாரம்பரிய உடைகளை, கலாசாரங்களைப் பேணிப் பாதுகாப்பதில் அதிக கவனம் செலுத்துகின்றனர்.

இந்தியாவிலிருந்தே எமது தேசிய உடையின் மாதிரி தேர்ந்தெடுக்கப்படுகிறது.

அதிகளவில் இது பயன்படுத்தப்படாவிட்டாலும் அது ஓரளவு உள்ளீர்ப்புச் செய்யப்பட்டுள்ளது.

பாராளுமன்றத்திலும், அரசசேவையிலும் தேசிய உடை கட்டாயமாகப் பயன்படுத்தப்படுமானால் அது வரவேற்புக்குரிய விடயமாகும். நவீன நாகரிக ஆடை அணிகலன்களின் பயன்பாடு மட்டுமே தேசிய உடை மறைவதற்கு காரணமல்ல. ஐரோப்பிய நாகரிக உடை இங்கு அறிமுகப்படுத்தப்பட்டதே தேசிய உடை இல்லாமல் போவதற்கு மூலகாரணமாயிற்று.

இது இலகுவான உடையாகப் பிரபல்யம் பெற்றது. தற்போது தேசிய உடை அரசியல் வாதிகள் மட்டுமே அணியும் ஆடையாக மாறியுள்ளது. "கபட ஆடை" என்ற நாமகரணம் இதற்குக் கிடைத்துள்ளது.

தேசிய ஆடைக்குப் பதிலாக ஐரோப்பிய ஆடையை அணியும் நாம் 'ரை' என்ற மேலதிக ஒன்றை மாட்டிக்கொள்வதை நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லை.

நீதிமன்றங்களில் சட்டத்தரணிகள் ரை, கோர்ட் அணிகின்றனர்.வெப்பநிலை அதிகமாகவுள்ள நமது நாட்டில் தமது தொழிலுக்காக ஒவ்வாத ரை, கோர்ட் ஆடையை அணிகின்றனர்.

இது ஆச்சரியத்தை அளிக்கின்றது. ஐரோப்பியர்களின் இந்த உடை மாதிரிகள் எமக்கு சரிவருமா என்பதல்ல. இலங்கை போன்ற நாட்டிற்கு சரிவருமா என்பதே கேள்விக்குரியது.

முஸ்லிம், தமிழர்களுக்கென் தனித்துவமான தேசிய ஆடைகள் உண்டு. உலகின் முஸ்லிம் நாடுகளில் பாவனையிலுள்ள ஆடை அணிகலன்களை முஸ்லிம்கள் பின்பற்றுகின்றனர்.

அதேபோல் இந்திய சமூகத்தினர் பயன்படுத்தும் ஆடை அணிகலன்களை இந் நாட்டு தமிழ் மக்கள் பின்பற்று கின்றனர்.

இலங்கையில் தமிழ்,முஸ்லிம் மக்கள் மேற்கண்டவாறே தமது தேசிய ஆடையை தெரிவு செய்துகொண்டுள்ளனர். ஆனால் சிங்களவர்களின் தேசிய உடையானது உலகில் வேறெங்கும் காணமுடியாத தனித்துவமானதாகும்.

இந்திய மாதிரியே தவிர முழுமையாக இந்திய ஆடையை நாம் தெரிவுசெய்யவில்லை.

புத்தபெருமான் போதித்த விதத்தில் எமது ஆடை அமைந்துள்ளது. பொலநறுவையிலுள்ள பராக்கிரம அரசரின் சிலையில் சாரம் போன்ற ஆடை தென்படுகின்றமை இதற்குச் சான்றாகும்.

ஆனால் இது தொடர்பில் இறுதித் தீர்மானத்திற்கு வரமுடியாது. ஏனென்றால் ஆடையென்பது மாற்றுவீதமாகும். ஆத்மார்த்தமான உணர்வை ஆடைகளால் நிர்ணயிக்கமுடியாது.

இசுறுமுனிய காதலர்கள் சித்திரத்தில் காதலன் டவுசர் போன்ற ஆடையையே அணிந்துள்ளான். எனவே ஆடைக்கும் நிலையான அர்த்தத்தை வழங்க முடியாது. கௌதமபுத்தரின் சிலைகளிலும் இதுபோன்ற சாயலே காணப்படுகின்றது.




ஆக்கிரமிப்பு காலகட்டங்களில் வேட்டியை அணிந்ததோடு அதற்கு மேலாக டவுசர் அணிந்ததையும் காணமுடிந்தது.

டவுசர் அணிந்து வயலில் இறங்க முடியாது. சாரத்தை கட்டியும் இறங்குவது கடினம். அதற்கான சிறந்த இலகுவான ஆடையை விவசாயிகள் தெரிந்து கொண்டனர். எனவே ஆடைகள் நிலையானவை அல்ல மாற்றமடையக் கூடியவை.

# சிங்களவர் பார்வை




கரையோரச் சிங்களப் பெண்மணி




முன்னாள் பிரதமர் பண்டாரநாயக்க தனது மனைவி சிறிமாவுடன்

## இலச்சினை



தேசிய இலச்சினையாக தேசியக் கொடியிலுள்ள சிங்கம், அரச மர இலைகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. ஒரு நாட்டின் தனித்துவத்தை அடிப்படையாக வைத்தே தேசிய இலச்சினை உருவாக்கப்படுகிறது. சிங்க இலச்சினையை தேசியக் கொடிக்கு உள்ளீர்ப்பதும் அரச இலைகளை பௌத்த மதத்தை குறிப்பிடுவது தொடர்பில் கடந்த வாரம் விவாதித்தோம்.




# தரிசனம்

வலம்புரி

# தேசிய உடை, அரச இலட்சனை

# தமிழர் பார்வை

தேசிய உடை என்பது தேசிய வாதத்துடன் தொடர்புபட்டதாகக் காணப்படுகின்றது. மேலைத்தேய கலாசாரப்பின்னணிகளில் இருந்து விலகி தம்மை அடையாளப்படுத்துவதற்கான குறியீடாகவே தேசிய உடையைநாம்குறிப்பிட்டுக்கூறமுடியும். தேசிய உடையைப்பொறுத்தவரை இலங்கையின் சுதந்திரத்திற்குப்பின் வலுவடைந்த இன அடையாளப்படுத்லாக நாம் அதனை



**பேராசிரியர் எஸ். சத்தியசீலன்**
பீடாதிபதி
பட்டப்பின் படிப்புகள் பீடம்
யாழ். பல்கலைக்கழகம்

பார்க்க முடிகிறது.

யாழ்ப்பாணத்தில் இளைஞர் காங்கிரஸை ஆரம்பித்த ஹன்டி பேரின்பநாயகம் மற்றும் ஜி.ஜி பொன்னம்பலம் போன்றவர்கள் தேசிய உடையில் தம்மை அடையாளப்படுத்த முன் நின்றனர்.

இருந்தும் தமிழர்களுக்கோ அன்றி சிங்களவர்களுக்கோ ஓர் நிலையான தேசிய உடை என்பது இருந்திருக்க வில்லை என்ற முடிவுக்கு உடைக்கலாசார வடிவங்களில் இருந்து நாம் வரமுடியும். சேர் பொன் இராமநாதன், சேர். பொன் அருணாசலம், சேர். வைத்திலிங்கம் துரைசுவாமி போன்றவர்கள் மேலைத்தேய ஆடைகளுடன் கலந்து தலைப்பாகை சூடிக்கொள்ளும் ஆடைக்கலாசாரத்தைக் கொண்டிருந்தனர்.

இதில் இனத்துவ அடையாளம் என்பதற்கு அப்பால் பொருளாதார செழுமையும் அதிகாரப் பலமும் சாதிய வெளிப்பாடுமே பளிச்சிட்டன. இவர்களுக்கு முற்பட்டவர்களின் உடையில் மேலாடைக்கான முக்கியத்துவம் மிகக்குறைவாகவே காணப்படுகிறது. இத்தகையதோர் நிலைமை சிங்களவர்களிடமும் இருந்துள்ளது. கண்டிச் சிங்களவர்கள் தமது உயர் சாதியத்தினை அடையாளப்படுத்துவதற்காக தமக்கென ஓர் ஆடைக் கலாசாரத்தைக் கொண்டிருந்தனர். ஆனால் அதனை கரையோரச் சிங்களவர்கள் அணிவதற்கான சுதந்திரம் இருக்கவில்லை. எனவே சிங்களவர்களிடமும் நீண்டதொரு பாரம்பரியத்தைக்கொண்ட தேசிய உடை இருக்கவில்லை என்பது ஏற்புடையதே. இலங்கை இனப்பிரச்சினையில் தேசிய உடை எந்தவித வகிபங்கையும் கொண்டிருக்க வில்லை என்பது நிறுத்திட்டமான உண்மை.

தமிழர்களின் தேசிய உடைகளை ஒத்ததாக சிங்களவர்களின் தேசிய உடையும் அமைந்திருந்தது. எஸ்.டபிள்யு ஆர். டி பண்டாரநாயக்காவின் தேசிய உடை தமிழர்களின் தேசிய உடையைப் பிரதிபலிப்பதாக இருந்தது. எனினும் தமிழ் – சிங்கள தேசிய உடையில் இருந்த ஒற்றுமை இன ஒருமைப்பாட்டிற்கான அடையாளமாக எவரேனும் காட்சிப்படுத்தியிருந்தால் – அதனை இன ஒற்றுமைப்படுத்தலின் சான்றாதாரமாக்கியிருந்தால் அது மகிழ்ச்சிக்குரிய விடயமாக இருந்திருக்கும்.

எனினும் துரதிஷ்டவசமாக தமிழ் – சிங்கள இனங்களுக்கிடையே இருக்கக் கூடிய பொதுமைப்பாடுகள் எவற்றையும் ஒப்பிட்டுக் காண்பிக்கக் கூடாதென்பதில் பெரும்பான்மை இனத்தின் நலனை மட்டும் உறுதியாகக் கவனித்தவர்கள் இருந்தனர். அந்த உறுதிப்பாட்டில் தேசிய உடையின் ஒற்றுமையும் அடியுண்டுபோனது.

மூவின மக்களை பேதப்படுத்திக் காட்டுவதில் தேசிய உடைகளை பாடப்புத்தகங்களில் காட்சிப்படுத்தியவர்கள் சிங்கள, தமிழ் ஆடவர்களின் ஆடையில் இருந்திருக்கக் கூடிய ஒற்றுமையையும் எடுத்துக் கூறியிருந்திருக்கலாம்.

சிங்களத்தைப் பேசி சிங்களவராகவும் தமிழைப் பேசுவதன் மூலம் தமிழனாகவும் இருப்பதற்கப்பால் தாம் அணிகின்ற உடைகளிலும் தமது இனத்தை அடையாளப் படுத்துவதாக இருக்க வேண்டும் என்ற சிந்தனையில் எழுந்த தேசிய உடையின் ஒட்டுமொத்த நோக்கம் மேலைத்தேய ஆதிக்க வாதிகளுக்கு எதிரானதாகும்.

தேசியவாதம் முனைப்புப்பெற்றபோது தேசிய உடை மூலமாகத் தம்மை மேலைத்தேய ஆதிக்கத்திலிருந்து வேறுபடுத்திக் காட்டிய தமிழர்களின் பங்களிப்பு காத்திரமானது. இருந்தும் தமிழர்களின் இந்த தேசிய ஒற்றுமையை புரிந்துகொள்ளும் திறனும் பக்குவமும் அன்றைய ஆட்சியாளர்களிடமும், சிங்கள மக்களை வழிநடத்திய தலைமைகளிடமும் இருக்கவில்லை.

தமிழ் – சிங்கள தேசிய உடையில் நுண்ணிய வித்தியாசங்களைத் தவிர ஒற்றுமை



**பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை**

களே அதிகம் உள்ளன. தேசிய ரீதியில் ஒற்றுமையாக இருக்கவேண்டிய தேசிய கீதம், தேசியக்கொடி என்பவற்றில் இன –மத அதிகார வன்மங்கள் எதிரொலிக்கின்ற போது தேசிய உடையில் இத்தகைய வன்மைத்தனங்கள் இல்லாது போனமை அதிசயமான உண்மையாயினும் அதற்கான காரணமும் இருக்கவே செய்கிறது. அதாவது தேசிய உடையின் தேவைப்பாட்டை முதலில் உணர்ந்தவர்கள் மதங்களின் குறியீடுகளையோ அவற்றின் மேலாண்மைத் தனங்களையோ உள்ளீர்க்கவில்லை. அவர்களின் சிந்தனைகள் எல்லாம் இலங்கையர்கள் என்பதை வெளிப்படுத்துவதாக மட்டுமே இருந்தது.

இலங்கையர் என்பதற்குள் சிங்கள – தமிழ் அடையாளங்கள் வெளிப்படுவதில் எந்தப் பிரச்சினையும் இருக்கவில்லை. இவ்வாறு மத ஊடுறுப்புகள் தேசிய உடையில் ஆக்கிரமிக்காததன் காரணமாக இனப்பிரச்சினையின் வகிபங்கில் இருந்து தேசிய உடை தப்பித்துக்கொண்டது.

### தேசிய (அரச) இலட்சனை

பிரச்சினைக்குரியது எதுவோ அவையெல்லாவற்றையும் தேசியத்துடன் தொடர்புபடுத்தும் துரதிஷ்டத்திலிருந்து தேசிய இலட்சனையும் தப்பித்துக் கொள்ள வில்லை. வாள் ஏந்திய சிங்கத்தை தேசியக்



**தந்தை செல்வநாயகம்**

கொடியில் பொறித்து நான்கு மூலையிலும் அரச இலையை பொறித்தவர்களுக்கு தேசிய இலட்சினையையேனும் இலங்கைத்தேசியத்தின் பொதுமையாக்க மனம் வராமை அபத்தமானதே.

சிங்கம் சிங்களவர்களுக்கான அடையாளம் எனக்கூறி அதற்கு நியாயம் கற்பிக்க முனைந்தவர்கள் கூட வாள் ஏந்திய சிங்கம் எதற்காக? என்ற கேள்விக்கு மௌனத்தையே விடையாக்கிக் கொண்டனர். பொதுவாக ஒரு நாடு தனக்காக சின்னத்தை – இலட்சனையைப் பொறிக்கும்போது அது அந்த நாட்டின் ஒவ்வொரு பிரஜையிடமும் தேசிய உணர்வை ஊற்றெடுக்கச் செய்யும் ஊக்கியாகத் தொழிற்பட வேண்டும். ஆனால் இலங்கையில் இந்நிலைமை இல்லை.

தேசியக் கொடியில் பொறிக்கப்பட்ட அதே வாள் ஏந்திய சிங்கம், சூரிய, சந்திரர், கலசம், நெற்கதிர், மலர் இதழ் எனச் சுட்டி நிற்கும் அரச இலட்சனையின் வடிவம் எதனைக் காட்டி நிற்கிறது. சூரிய, சந்திரர், தமிழர்களுடனும் சம்பந்தப்பட்டது என்பதில் இருவேறு கருத்திற்கிடமில்லை.

ஆனால் அவற்றின் வடிவமைப்பு, சிங்கள கலைத்துவப் படைப்பின் அடையாளமாகவும், தர்மசக்கரம் பௌத்த மதத்தின் சின்னமாகவும் வாள் ஏந்திய சிங்கம், சிறுபான்மை இனத்தை அடக்கும் வீர சிங்கமாகவும் காண்பிக்கப்பட்டுள்ளது.

நடுவில் வாள் ஏந்திய சிங்கமும் தலையில் தர்ம சக்கரமும் இருப்பதற்கான வகைகூறலை தமிழ் மக்கள் எப்படி எடுத்துக் கொள்வார்கள். இலங்கை நம் நாடு இங்கு இன, மத, மொழி என்ற பேதத்திற்கே இடமில்லை என நினைத்துக் கொள்வார்களா அல்லது,



**சேர்.பொன் இராமநாதன்**


பௌத்த சிங்கள நாடு என்பதையே அந்த இலட்சனை சுட்டிநிற்கிறதென்பதை உணர்ந்து கொள்வார்களா? தேசிய அடையாளமொன்றை பொறித்து விட்டு அதற்கு எத்துணை விளக்கம் – வியாக்கியானம் கொடுத்தாலும் அது ஏற்படுத்தியுள்ள கட்புல உணர்வை மாற்றுவதென்பது முடியாத காரியம். எனவே தவறான எண்ணக் கருவை மக்களிடையே ஏற்படுத்தாத வரையிலேயே தேசிய உணர்வைக் கட்டியெழுப்ப முடியும். அவ்வகையில் இலங்கையின் அரச இலட்னை பௌத்தத்துடனும், சிங்களத்துடனும் சம்பந்தப்பட்ட குறியீடுகளுடன் தொடர்புபட்டது. இந்தக் குறியீடு, தம்மதீப கோட்பாடு, சீகதீபக்கோட்பாடு என்பவற்றுடன் தொடர்புபட்டதாகவே கருதப்படுகிறது.

அதாவது, கௌதமபுத்த பிரானினால், பௌத்தர்களுக்கென தேர்ந்தெடுக்கப்பட்ட இடமே இலங்கை என்றும் எனவே அது பௌத்த தர்மங்களுக்குரிய நாடு என்றும் வலியுறுத்தும் தம்மதீப கோட்பாடும் இலங்கை சிங்களவர்களுக்குரிய நாடு என்ற சீகதீப கோட்பாடும் இரண்டறக் கலந்த வடிவமாகவே நாம் அரச இலட்சனையைக் காண்கிறோம்.

சந்திப்பு-
என் .விஜயசுந்தரம்

அதேவேளை அந்த இலட்சனையின் மற்றுமோர் வடிவம் சிறுபான்மையினருக்கு இலங்கையில் எந்த உரிமையும் இல்லை என்பதையும் உணர்த்துகின்றதா? என்ற நினைப்பு ஏற்படுவதில் எந்தத் தவறும் இல்லை.

அவ்வாறான நினைப்பு தவறு என யாரேனும் கூறுவார்களாயின் அதைத் திருத்தும் பொறுப்பு தவறை ஏற்படுத்தியவர்களிடமே உண்டென்பதையும் உணர்வார்களாக.



# தரிசனம்

வலம்புரி
Muslim Information Centre

# நீடித்துச் செல்லும் முகாம் வாழ்க்கை

# இடம்பெயர்ந்த முஸ்லிம்களின் பரிதாபம்

1990ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதத்தின் இறுதி வாரத்தில் வெளியேறிய வடமாகாண முஸ்லிம்கள் புத்தளம், அநுராதபுரம், குருனாகல், நீர்கொழும்பு போன்ற இடங்களை வந்தடைந்தனர். இங்கு வந்தவர்களை உள்ளூர் மக்கள் அன்போடு வரவேற்றனர். ஏறத்தாழ 5 வருடங்கள் வரை கொட்டும் மழையினையும் கொழுத்தும் வெயிலினையும் தாங்



கியவர்களாக அரசாங்கத்தினாலும் அரச சார்பற்ற நிறு வனங்களினாலும் வழங்கப்பட் நிவாரணத் தினையே தஞ்சமாகக் கொண்டு முகாம்களில் வாழ்ந்து வந்தனர். இவர்களின் முகாம் வாழ்க்கை சமூக பொருளாதார சூழல் மற்றும் கலாசார ரீதி யில் பிரச்சினைகளை எதிர்கொண்டு 1996ஆம் ஆண்டு காலம் வரை வாழ்ந்து வந்தார்கள்.

1990ஆம் ஆண்டு ஜூலையிலிருந்து ஒக் டோபர் கடைசிப்பகுதி வரை முல்லைத்தீவைச் சேர்ந்த முஸ்லிம்கள் மாத்திரமே இப்பிரதேசத்தில் அகதிகளாக வாழ்ந்து வந்தனர். அதே வருடம் ஒக்டோபர் இறுதிப் பகுதியில் புத்தளம் மாவட்டத்தில் அகதிகளின் எண்ணிக்கை பெரிதும் அதிகரிக்கத் தொடங்கியது.

இக்காலத்தில் ஆயிரக்கணக்கான. வடமாகாண முஸ்லிம்கள் அகதிகளாகப் புத்தளம் மாவட்டத்திற்கு அபயம் தேடிவந்தார்கள். இவர்களில்பலர் வடமாகா ணத்தின் மன்னார் மாவட்டத்திலிருந்து கடல் வழியாக கற்பிட்டிக்கும், மற்றவர்கள் தரை வழியாக புத்தள மாவட்டத்தின் காரைதீவு, புத்தளம் நகரம், புத்தள தெற்குப் பிரதேசங்களிற்கும் வரத்தொடங்கினர்.

புத்தளம் நோக்கி வந்த அகதிகளினால் இப் பிரதேசம் நிலை குலைந்தது. ஆயிரக் கணக்கில் வந்த அகதிகளுக்கு அபயம் கொடுப்பதற்காக பாட சாலைகள் மூடப்பட்டன. பள்ளி வாயில் வளவுகளில் மதுர சாக் கட்டடங்களில் அகதிகளுக்கு தற்காலிக அபயம் கொடுக்கப்பட வேண்டிய சூழ் நிலை உருவாகியுள்ளது. மேற்குறித்த கட்டடங்கள் அகதிகளின் உறைவிட வசதிக்கு போதாமல் போன போது தனியார் வீடுகளும் ஏனைய பொதுக் கட்டடங்களும் இந் நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட வேண்டிய சூழ்நிலை உருவாகியது. இவ்வாறு புத்தள மாவட் டத்தில் முஸ்லிம்கள் செறிந்து வாழும் புத்தளம், கற்பிட்டி முந்தல் வணாத்திவில்லு உதவி அரசாங்க பிரிவுகளின் பாடசாலைகள், வணக்கஸ்தலங்கள், பொதுக் கட்டடங்கள், தனியார் வீடுகள் முழுமையாக முஸ்லிம் அகதிகளை பரிபலிப்பனவாக மாற்றி அமைக்கப்பட்டன.

இவ்வாறு புத்தளம் வந்த அகதிகளில் பலர் கற் பிட்டிப்பிரதேசத்தில் அமைந்துள்ள முஸ்லிம் கிராமங்களுக்கு அபயம் தேடி வந்தார்கள். இவ் வாறு வந்தவர்களில் வடமாகாணத்தில் பல்வேறு கிராமங்களைச் சேர்ந்த முஸ்லிம்கள் உள்ள டங்குவர். இதில் முல்லைத்தீவு முஸ்லிம்களும் மன்னார் மாவட்ட முஸ்லிம்களும் எண்ணிக்கை ரீதியாக அதிகமாக காணப்பட்டனர். இவ் அதிகரித்த அகதிகளினால் கல்பிட்டியில் அகதிகளுக்கான வாழ் விடத்தேவைகள் அதிகரித் தன. அகதிமுகாம்கள் அமைக்கப்பட வேண்டிய தேவையும் இங்கு அக் காலத்தில் ஏற்பட்டது.

ஆனால் துரதிஷ்டவசமாக கல்பிட்டிச் சூழலில் வாழ்விட வசதிக்கு பொருத்தமான பிரதேசங்கள் இருக்கவில்லை. இக் கிராமங்களில் குடியிருப்புக்கு பொருத்தமான இடங்களில் உள்ளூர் மக்கள் வாழ்ந்து வந்தார்கள் எஞ்சி பிரதேசம் தென்னந் தோட்டங்களாகவும் மணல் திடல்களா கவும் காணப்பட்டன.

கிராமங்களில் மணல் திடல்களை உள்ளடக்கிய பிரதேசத்தில் அரசாங்கத்திற்கு சொந்தமான காணிகள் காணப்பட்ட தால் இப்பிரதேசத்தில் அகதிகளுக்கென முகாம்கள் அமைப்பதற்கு அரசாங்க உத்தியோகத்தர்களால் முடிவு எடுக்கப்பட்டது. இதன்படி முகாமுக்கு ஒதுக்கப்பட்ட இடங்களில் சிறு குடிசைகள் அமைக்கப்பட்டு அகதிக்குடும்பங்களுக்கு உறை விடம் வழங்கப்பட்டது.

இவ்வாறு அமைக்கப்பட்ட முகாம்களில்

## தலைமைத்துவம் இல்லாத அநாதைகளாக வாழ்கிறோம்

இட வசதியின்மையால் குடிசைகள் மிக நெருக்கமாக அமைக்கப்பட்டிருக்கின்றன. ஒரு குடிசை 12 அடி நீளத்தையும் 10 அடி



அகலத்தையும் கொண்டதாகக்கட்டப்பட்டிருந்தது. தென்னை ஓலையால் பக்கச்சுவர்களும் கூரையும் அமைக் கப்பட்டிருந்தன. சனச் செறிவு கொண்டதாக இம்மு காம்கள் காணப்பட்டது. உதாரணமாக 5 ஏக்கர் பரப்பினைக் கொண்ட நிலப்பரப்பில் முல்லைத் தீவைச் சேர்ந்த 232 குடும்பங்கள் உள்ளன.

ஆரோக்கியமான கௌரவமான வாழ்க்கையே வாழ்வதற்கு குடும்பத்தின் ஒழுக்கத்தைப் பேணுவதற்கு கல்வி கலாசார அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்கு அகதிகளுக்கு முகாம் வாழ்க்கை ஒரு சவாலாக காணப் பட்டது.

### முகாமில் வாழ்பவர்களின் கருத்து


யாழ்ப்பாணத்திலிருந்து வெளியேற்றப்பட்ட நாளிலிருந்து நாம் படும் துன்பங்களும் வேத னைகளும் சொல்லிலடங்காதவை. அன்று முதல் இன்று வரை நாம் முகாமிலேயே வாழ்ந்து வருகின்றோம் .அன்று நாம் எதிர்நோக்கிய அதே பிரச்சினைகள் இன்றும் எமதுமுகாமில் காணப் படுகிறது. அதாவது எமது முகாமில் குடிநீர் வசதியின்றி ஒரு குழாயில் குடிநீர் பெற 148 குடும்பங்களும் கடந்த 18 வருடங்களாக வரி சையில் நின்று தான் பெறுகின்றோம் அதே நிலைதான் மலசலகூடங்களிலும் பொதுக் கிணறுகளிலும் நிலவுகின்றது. நிலக் கீழ் நீர் உவர் தன்மை வாய்ந்தது. உவர் நீர் கொண்ட ஒரு சில கிணறுகள் காணப்படுகின்றன. இக் கிணறுகளின் உப்பு நீரைப்பயன்படுத்தி குளிப்பதனால் பிள்ளைகளினதும் பெரியவர்களினதும் கோலத்தைச் சொல்ல முடியாது. தொழில் வாய்ப்புக்களும் மிகக்குறை வாகும். ஆட்டோ ஓட முடியாது உப்பளத்தில் சீசனுக்கு மட்டும் தான் தொழில் காணப்படுகிறது. இறால் பண்ணைகள் நோய்த் தாக்கத்தின் காரணமாக கைவிடப்பட்டதுடன் நாமும் கைவிடப்பட்டுள் ளோம்.

அரசினால் 1990ஆம்ஆண்டு வழங்கிய அதே தொகையையே இன்றும் தருகின்றார்கள். அதாவது ஐந்து பேர் கொண்ட ஒரு குடும்பத்திற்கு 1260 ரூபாவை வழங்குகிறார்கள் அதே நேரம் ஒரு குடும்பத்தில் ஐந்துக்கு மேலதிகமாக எத்தனை பேர் இருந்தாலும் அதே தொகை யையே வழங்குகிறார்கள். தற்போதுள்ள. வாழ்க்கைச் செலவுக்கு இதுபோதுமா? அரச நிவாரணத்தைப் பயன்படுத்தி ஒரு தேநீர்கூடத் குடிக்க முடியாது. எமது பட்டினி நிலை அரசுக்கோ அல்லது சர்வதேச சமூகத்திற்கோ எங்கே விளங்கப்போகிறது. கூலி வேலையாவது செய்வோம் என நிர்ப்பந்த நிலையில் சென்றால் உள்ளூர் மக்களின் வயிற்றில் அடிக்கி றோம் என்று முரண்பாடுகள் எழுகின்றன.

அவ்வாறே எமது முகாம் குறைந்த நிலப்பரப்பில் அதிக சனத்தொகையைக் கொண்டு வாழந்தபோது எமது முகாமும் தீப் பிடித்துக் கொண்டது. அதில் எம்மிடம் இருந்த உடுதுணிகள் முழுவதும் எரிந்து சாம்பலாகின. சில உயிர் களும் பலியாகின. சிறுவர் முதல் பெரியவர்கள் வரை உளவியல் ரீதியில் பெரிதும் பாதிக்கப்பட்டனர்.

எமது முகாமில் கல்வி கற்பதற்கான சூழல் இல்லை அருகில் பாடசாலை வசதிகள் இல்லை தூர இடங்களுக்குச் சென்று படிக்க வசதி வாய்ப் புக்கள் இல்லை. பாடசாலை மாணவர்கள் சென்றுவரக் கூடிய போக்குவரத்து வசதிகள் இல்லை இடைவிலகல் அதிகமாகக் காணப்படுகின் றது. கல்வியில் இருண்ட சமூகம் தோன்றி வருகின்றது. பெண் பிள்ளைகளை வெளியில் அனுப்ப பாதுகாப்பு ரீதி யில் தயக்கம் காட்டி கல்வி கற்பதை நிறுத்தி விடுகிறார்கள் கற்றவர்கள், வசதி படைத்தவர்கள் கொழும்பு, நீர்கொழும்பு, பாணந்துறை போன்ற பகுதிகளுக்கு சென்று விட்டார்கள் நாம் தலைமைத்துவம் அற்ற அநாதை களாகக் காணப்படுகின்றோம். எமக் கென பாராளுமன்ற பிரதிநிதித்து வமின்மையால் அரசியல் அனாதைகளாகவும் காணப் படுகின்றோம்.

நாம் அகதி முகாம்களில் வாழ்ந்தபோது பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கினோம் அவை இன்றும் தொடர்வதாகவே இருக்கின் றது. அதாவது அரசினால் அன்று வழங்கப்பட்ட அதே தொகையையே எமது உலர் உணவுத் தொகையாக தருகிறார்கள். இத் தொகை நாளொன்றுக்கு ஒரு நபருக்கு 8 ரூபா 40 சதமாகவே காணப்படுகின்றது. இதுஇன்றைய விலையில் ஒரு சாதாரண தேநீர் அருந்துவதற்கே போதுமானதாக இல்லை.இது தானா எமது ஒரு நாள் உணவு? அப்படியென்றால் எமது குழந்தைகள் பாலூட்டும் தாய்மாரின் நிலைப்பாடு



என்ன? உடைக் காக கல்விக்காக நாம் என்ன செய்வது?

இவற்றுக்கும் மேலாக பாடசாலைகளிலும் வைத்தியசாலைகளிலும் போக்குவரத்தின் போதும் எம்மை, எமது குழந்தைகளை இரண்டாம் தர பிரஜைகளாக நோக்குகின்றனர். அகதி , வந்தான் வரத்தான் ,முகாமில் வாழ்பவன் என எம்மை தூற்றும் வார்த்தைகள் ஏராளம். ஓட்டு மொததமாக பாாகுமபோது அகதிமுகாமில் வாழும் எங்களுக்கு சமூக பொருளாதார அரசியல் ரீதியில் மிகவும் தாழ்த்தப்பட்டவர்களாக வும் அநாதரவாளர்களாக வும் எடுத்தவர்களெல்லாம் ஏமாற்றும் கைப் பொம்மையாகவும் நாம் வெட்கமிழந்து இங்கு வாழ்கின்றோம்.

மீன் பிடித் தொழிலினையே பிரதானமாகக் கொண்டு வாழுகின்ற என் போன்றவர்களுக்கு கடந்த காலங்களிலும் சரி தற்போதும் சரிஎமதுதொழிலை முறையாக செய்யக்கிடைப்பதில்லை. அதேநேரம் எமக்கு கடலில் அனைத்துத் தொழி லையும் செய்ய முடியாது . இதனால் நாம் சில காலத்துக்குத்தான் தொழில் செய்கின்றோம். சில காலத்துக்கு அரசாங்கத்தின் உலர் உணவு களையே நம்பி இருக்கின்றோம்.

ஆனால் அரசாங்கமோ அன்று கொடுத்த



அதேதொகையைத்தான் இன்றும் தருகிறது. இதனால் நாம் வறுமையிலேயே தொடர்ந்தும் இருக்கின்றோம் இந்த வறுமை எமதுபிள்ளைகளுடைய கல்வி போசாக்கு போன்ற பல விடயங்களைப் பாதிக்கின்றது.

ஆகவே எங்களை சுதந்திரமாகவும் எல்லாக் கடல் தொழிலை செய்வதற்கு உங்களால் முடியு மென்றால் ஏற்படுத்தித் தருமாறு தாழ்மையாக கேட்டுக்கொள்கிறோம். அவ்வாறு ஏற் படுத்தித் தந்தால் நாங்கள் அரசாங்கத்தின் இச்சிறு தொகையை எதிர்பார்க்கமாட்டோம் அப்பெரிய சமுத்திரத்தில் எங்களுக்குரியதை நாங்கள் தேடிக்கொள்வோம்.



# தரிசனம்

# தேசிய உடை, அரச இலட்சனை முஸ்லிம்களின் பார்வை

இலங்கை பல தேசிய இனங்களைக் கொண்ட ஒரு நாடாகும் .இலங்கைக்கு இச் சமூகங்களின் வருகையை வரலாற்று ரீதி யாக நோக்கும் போது தமிழர்களும் சிங்கள வர்களும் இந்தியாவிலிருந்து இலங்கை வந்துள்ளனர். அதன் பிரகாரமே அச் சமூகங்களின் உடை, நடை, கலாசாரப் பாரம்பரியங்கள் காணப்படுகின்றன.

அவ்வாறு அவர்களின் வருகையோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது இலங்கை வாழ்கின்ற தமிழ், சிங்கள சமூகங்களிடையே யும் வித்தியாசமான உடை, நடை, கலா சாரங் கள் காணப்படுகின்றன. அதாவது ஒரே இடத்திலிருந்துவந்த இருசமூகங்களிடையே பல்வேறு வித்தியாசங்கள் காணப்படுகின்றன.

இவைகளை இன ரீதியாகப் பார்ப்பதா? அல்லது மத ரீதியாகப் பார்ப்பதா என்பது சிக்கலான விடயம். அதாவது சிங்கள மொழியைப் பேசுகின்ற பௌத்தர்கள், கிறிஸ்தவர்கள் காணப்படுகின்றார்கள். இவர்களில் பௌத்தர்களின் உடை சிங்கள மொழி பேசுகின்ற கிறிஸ்தவர்களின் உடையிலிருந்து வித்தியாசப்படுகிறது.

அவ்வாறே தமிழ் மொழி பேசுகின்ற இந்துக்கள் கிறிஸ்தவர்கள் காணப்படுகின்றார்களிலும் இவர்களிலும் இந்துக்களின் உடை, நடை, கலாசாரம் தமிழ் மொழி பேசு கின்ற கிறிஸ்தவர்களின் உடை, நடை, கலா சாரத்திலிருந்து வித்தியாசமானது.

இவைகளின் அடிப்படையில் முஸ்லிம்களை நோக்கும் போது இலங்கை வாழ் முஸ்லிம்கள் உலகின் பல பாகங்களிலிருந்து பல்வேறு நோக்கங்களுக்காக இலங்கை வந்தார்கள். அவர்கள் இந்தியா, மத்திய கிழக்கு, தென்கிழக்காசியா போன்ற நாடுகளிலிருந்து வந்துதான் இலங்கையில் வாழ்கின்றனர். மேலும் சிலர் உலகின் ஏனைய பாகங்களி



லிருந்து இங்கு வந்து வாழ்கின்றனர். இவர்களில் சிலர் இலங்கைத் தேசத்தின் நன்மைகளைப் பாதுகாப்பதற்காகவும் இலங்கை தேசத்தின் விசுவாசிகளாக கொண்டுவரப்பட்டவர்களும் இருக்கின்றனர். இவ்வாறு பல்வேறு கலப்பினைக் கொண்ட சமூகமாகத்தான் இலங்கை முஸ்லிம் சமூகம் காணப்படுகிறது.

இவ்வாறு இலங்கை முஸ்லிம் பல் வேறு தேசத்திலிருந்து பல்வேறு கலாசாரத் தையும் உடைகளையும் பயன்படுத்திய வர்கள் என்பதற்கு சிறந்த உதாரணத்தை திருகோணமலை மாவட்டத்தில் அமைந் துள்ள கிண்ணியாவில் காணலாம். அதா வது அங்கு ஆபிரிக்கா, யெமன், கேரலா, தமிழ் நாடு, மலையாளம் போன்ற பல்வேறு பிரதே சத்து மக்கள் ஒரே பிரதேசத்தில் அய லவர்களாக வாழ்கின்றனர். ஆனால் அவர் களின் மொழி, உடை, நடை, பண்பாடுகள் அவர்களுக்குள் மாத்திரம் பயன்படுத்து கின்றனர். பொது நிகழ்வுகள் ஏனைய மத அனுஷ்டானங்களில் ஏனையவர்களுக்கு சமூகத்தில் அப்போது காணப்படுகின்ற விதிமுறை, நடைமுறை என்பவற்றுக்கு கட்டுப் பட்டுசமூக ஒற்றுமையை இலக்காகக் கொண்டு காணப்படுகின்றனர்.

இதனால் இலங்கை முஸ்லிம்களின் உடை இது தான் என்று உறுதியாக எடுத்துக் கொள்ள முடியாது இருப்பினும் கடந்த காலங்களில் முஸ்லிம்களின் உடைகளில் பல் வேறு வித்தியாசங்கள் காணப்பட்டன. அதா வது மூடிய சாரம் துருக்குத் தொப்பி சட்டைக்கு மேல் கோட் அணிவது இலங்கை முஸ்லிம் களின் தனிப்பட்ட உடை முறையாக காணப் பட்டது. இதற்கும் சிறந்த உதாரணமாக முன் னர் நீதி மன்றத்தில் துருக்குத் தொப்பி அணிந்து செல்வதற்கு அனுமதி இருந்தது. அவ்வாறு அணிந்து செல்ல முடியாமல் போனமையால் அதற்காக போராடி அவ்வுரிமையைப் பெற்றுக் கொண்ட சம்பவங்களும் காணப்படுகின்றன.

ஆனால் தற்போது இவ்வாறு ஒரு சமூகத்தின் தனிப்பட்ட உரிமைகள் பண்பாடுகளை உரிய முறையில் பின்பற்ற முடியாமல் போகின்றமையாலும் உரிமைகளை பெற்றுக்கொள்ள முடியாமையானது வேதனைக்குரிய விடயமாகும் .ஒரு தேசிய சமூ

## சிறுபான்மையினருக்கு அறவே இடமளிக்காத தேசிய சின்னம்

கத்தின் உடை,நடை, கலாசாரங்களைப் உரிய முறையில் பின்பற்ற முடியாமல் அச் சமூகம் தற்போது பல்வேறு கஷ்டங்களை அனுபவித்து வருகின்றமையானது இலங் கையின் சிறந்த சகவாழ்வான சமூகத்தை காண முடியுமா? என்ற கேள்வியே காணப் படுகின்றது.

ஆனால் சிங்கள தமிழ் சமூகங்களுக்கிடையில் உடை மற்றும் கலாசாரத்தில் அதிக மான இடங்களில் ஒற்றுமை காணப்படுகின்றது. ஏனெனில் அவை இரண்டும் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு இறக்கு மதி செய்யப்பட்டவைகளாகும். ஆனால் முஸ் லிம்களின் உடை கலாசாரம் பிரதேசத்திற்கு பிரதேசம், ஆளுக்கு ஆள் வித்தியாசப்படு கிறது. ஏனெனில் இலங்கை முஸ்லிம்கள் பல்வேறு தேசங்களிலிருந்து வந்து இலங் கையில் வாழ்கின்றவர்களாவர்.

ஆகவே இவ்வாறான வித்தியாசமான உடை இலங்கை முஸ்லிம்களுக்கு பாரிய ஒரு பிரச்சினையாக தற்போது காணப்படுவ தில்லை. ஏற்கனவே கூறியது போல் துருக் குத்தொப்பி அணிந்து நீதிமன்றம் சென்ற காலம் தற்போது இல்லை. அவ்வாறு செல் லவும் முடியாது. அக்கலாசார உடை தற்போது கோட் மாத்திரம் அணிந்து நீதி மன்றம் செல்ல முடியும் என்ற நிலையை உருவாகியுள்ளது.

இவ்வாறே இலங்கை முஸ்லிம்களின் தனிப்பட்ட உடை முறையானது இப்போது எங் கும் காணமுடியாதுள்ளது. இது நவீன கால ஒழுங்குக்கு ஏற்ப மாறிச் செல்கின்றது. இதனை தென்னிலங்கையில் வாழ்கின்ற மலே முஸ் லிம்களிடம் சிறப்பாக காணலாம் அதாவது அவர்கள் சிங்கள சமூகத்தோடு ஒன்றாக வாழ்ந்து பழகி வருவதினூடாக அவர் கள் அவர்களுக்குள் கரைந்து செல்கின்றார்கள் அது மாத்திரமல்லாமல் தற்போதைய டெனிம் கலா சாரம் குறித்த சமூகத்தை மாத்திரம் பாதிப் பதில்லை எல்லா சமூகத்தையும் பாதித்துள்ளது. அக்கலாசாரத்தை நோக்கி அனைத்து மக்களும் செல்கின்றனர். இது இனங்களின் வித்தியாசமான உடைமுறையை முற்றாக மாற்றிய மைத்துள்ளது.

இஸ்லாம் மார்க்கம் பெண்களின் உடை விடயத்தில் “பெண்கள் தங்கள் உடலை ஏனைய ஆடவர்கள் ரசிக்கும் படி உடை அணிய வேண்டாம் என்றும்” மற்றும் “இறுக்கமான உடைகளை அணிந்து உங் கள் உடல்களுக்கு கிடைக்கின்ற சுகத்தையும் பிறரின் பார்வைக்கும் ஆளாகி விடவேண்டாம் என்றும் தடுத் துள்ளது ” அதற்காக வேண்டி முஸ்லிம் பெண்கள் “பர்தா ” போன்ற உடலுக்கு மிகவும் ஆரோக் கியமான மற்றும் இறுக்கமில்லாத உடை களை அணிந்து கொள்கின்றனர்.

அதாவது தற்போது ஏற்பட்டு வருகின்ற பொருளாதார பிரச்சினைக்கு முகம் கொடுக்க வேண்டுமானால் வீட்டில் ஆண் மற்றும் பெண் கள் தொழில் செய்ய வேண்டும் . அதனடிப் படையில் முஸ்லிம் பெண்களும் தொழில்களுக் குச் செல்கின்றார்கள் கல்விக் கல்லூரிகள். பல்கலைக்கழகங்களுக்குச் செல்கிறார்கள். அவ்வாறு செல்லும்போது தாம் தங்களைப் பாதுகாத்துக் கொள்வதோடு பிறரையும் பாது காக்க வேண்டும் என்பதற்காக வேண்டி அதிகமான முஸ்லிம் பெண்கள் இவ்வாறு “பர்தா” என்னும் உடையை அணிந்து கொள் கின்றனர்.

இதன் மூலம் பிறரின் வித்தியாசமான பார்வை. ஆசைகளை தூண்டக்கூடிய விட யங்களை தாங்கள் தவிர்த்துக் கொண் டால் அதிகமான பிரச்சினைகளை தவிர்த் துக் கொள்ளலாம் அவ்வாறு தாங்கள் பிறர் ரசிக் கக்கூடிய விதத்திலும் ஆசைகளை தூண்டக் கூடிய விதத்திலும் உடைகளை அணிந்து சென்று விட்டு எவ்வாறு பிறர் மீது அநியாய மாக தவறு கூற முடியும்.

ஒருவரின் ஆசைகளை தூண்டக் கூடிய விதத்திலும் அதற்கு உறுதுணை யாக இருக்கக்கூடாது என்பதற்காகவும் இவ் வாறு இந்த “பர்தாவை” முஸ்லிம் பெண் கள் அணிகின்றார்கள் அவ்வாறு தவறுகள் ஏற்படுவதற்கு துணையாக தாங்கள் இருந் தால் அத் தவறை தாங்களே பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டும் என்பதே அதிக மான முஸ்லிம் பெண்களின் நிலைப்பாடாக காணப்படுகின்றது. இவ்வாறு பிறர் மீதும் சமூகத்தின் மீது சிறந்த கரிசனை கொண்டுதான் இந்த “பர்தா” முறையை அணிந்து தங்களைப் பாதுகாப் பதோடு பிறரையும் பாதுகாக்கின்றனர்.

ஆனால் அண்மைக் காலங்க ளில் பல்வேறு இடங்களில் இவ் வுடை அணிவதற்கு பல பிரச்சினைகளை ஏற்படுத்து கிறார்கள். இது இலங்கையில் விதிவிலக்காக காண முடியாது. இது ஒரு சாதாரண உடை இதனை முஸ்லிம் பெண்கள் அணிந்து பாடசாலை களுக்கு மற்றும் ஏனைய இடங்க ளுக்குச் செல்லும் போது ஏன் தடுக்கிறார்கள் என்பது தான் புரியாத புதிராக உள்ளது.

இவர்கள் அணிகின்ற உடை போன்று அல்லது சற்று வித்தியா சமான உடைகளை கிறிஸ்தவ மதத்திலுள்ள அருட்சகோதரி களும் அணிகிறார்கள். அதனை யாராவது தவறாகப் பார்க்கிறார்களா? அல்லது அதனை அணியக் கூடாது என்று யாராவது இது வரை தடுத்திருக் கிறார்களா? இவைகள் அவரவர்களின் உரிமை அதனை அவரவர்களே தீர்மானிக்க வேண்டும்.ஒரு மனிதனின் உரிமையையோ அல்ல காலாகாலமாக அனுபவித்து வருகின்ற சலுகையையோ பறிப்பது அல்லது வற்புறுத் துவது அடிமைத்தனமாகும். இவ்வா றான அடிமைத்தனத்தை இஸ்லாமும், முஸ் லிம்களும் மிகவும் கடுமையாக வெறுக் கின்றனர். ஆகவே அனைத்து மதத்தின ருக்கோ அல்லது சமூகத்தினருக்கோ அனைத்து உரிமைகளுடன் வாழும் உரிமையை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியது அரசின் கடமையாகும்.

### தேசிய சின்னம் பற்றிய ஒரு முஸ்லிமின் பார்வை

இதனை தேசியம் பற்றிய கண்ணோட் டத்தில் பார்க்கும் போது சரியாகப்படுகின் றது. ஆனால் அந்தத் தேசியத்தில் என் னென்ன இனங்கள் காணப்படுகின்றன. அவ்வாறு காணப்படுகின்ற தேசிய இனத்துக்கு எவ்வாறான உரிமைகள் சலுகைகளை அத் தேசியத்தில் வாழ்கின்ற பெரும்பான்மை இனங்கள் வழங்கியுள்ளன என்பது இங் குள்ள பாரிய கேள்வியாகும்.

அதே நேரம் ஒருதேசத்தில் வாழ்கின்ற பல்வேறு இனத்தை அத்தேசத்தின் இனமா கப்



சிறாஜ் மஷ்ஹூர் முஸ்லிம் கலாசார மற்றும் அபிவிருத்திக்கான நிறுவனப்பணிப்பாளர்

பார்ப்பதா? அல்லது சிறுபான்மையி னர், பெரும்பான்மையினர் என்ற கண் ணோட்டத்தில் பார்ப்பதா? என்பதைப் பொறுத் தும் இங்கு பொறிக்கப்பட்டுள்ள சின்னத்தை நோக்கலாம். இருப்பினும் இச்சின்னமானது அதன் மத்தியில் சிங்களவர்களைக் குறிக்கும் வீர சிங்கத்தையும் அதன் தலையில் பௌத் தர்களின் தர்மச் சக்கரத்தையும் உள்ளடக்கி அவ்வாறே அதன் கீழ் பகுதியில் முழுக்க முழுக்க பௌத்த மதத்தைப் பிரதி பலிப்ப தாக காணப்படுகின்றது.

இத்தேசிய சின்னத்தில் தேசிய கொடியில் சிறுபான்மை சமூகங்களுக்கு வழங் கப்பட்டிருக்கின்ற ஒரு சிறு இடம் கூட காணப் படவில்லை. இச்சின்னமானது முழுக்க முழுக்க பௌத்த ஏகாதிபத்தியத்தையே சித் தரிக்கின்றது. இச் சின்னத்தில் பௌத்த மதத் தின் ஆதிக்கமே அதிகமாக காணப்படு கின் றது. ஒரு தேசத்தில் பெரும்பான்மையாக காணப்படுகின்ற இனத் தின் பெயரால் சின்னங்களோ கொடிகளோ உருவாக்கு வது ஒரு முஸ்லிம் பார்வையில் பாரிய தவ றில்லைஏனெனில் பெரும்பான்மை இனமே அத்தே சத்தில் ஆதிக்க சக்தியாக காணப்படும்.



எம்.சி. சித்திலெப்பை

கின்ற சமூகத்தையும் அவர்களின் உணர்வு களையும் பெரும்பான்மையாக வாழ் கின்ற சமூகம் உணர்ந்து அவர்களின் உரிமைக ளுக்கு உரிய இடங்களைக் கொடுக்க வேண் டும் அவ்வாறில்லாமல் கிறு பான்மை யாக வாழ்கின்ற ஏனைய தேசிய இனத்தை அடக்கி அடிமைகளாக வைத்துக் கொள் வதை முஸ்லிம்கள் நியாயமாக ஏற்றுக் கொள்ள முடியாது. அவ்வாறே இந்த தேசிய சின்னத் திலும் பௌத்த மதத்தின் பெயரால் அதன் சின்னங் களால் இத்தேசிய சின்னம் முழுமை யாக உருவாக்கப்பட்டுள்ளது. அது ஏனைய தேசிய இணங்களை அடக்கி ஆளும் வழிமுறை யின் ஒரு பகுதியாகும்.

> மனிதர்கள் எப்படிப்பட்டவர்கள் –என்ப தைக் காட்டுவது துன்பங்களே!
>
> – கிரீஸ்

வலம்புரி

## எங்கள் வேதனையை இரட்டிப்பாக்கிய கலைஞர் கருணாநிதியின் வாய்ச்சாடல்

இலங்கைத் தமிழர்களுக்கு அன்று முதல் இன்று வரை ஆதரவான கட்சி திராவிட முன்னேற்றக்கழகமே என்று கலைஞர் கருணாநிதி தெரிவித்துள்ளார்.

அதற்கு ஆதாரமாக சட்டப்பேரவையில் உறுப்பினர் பதவிகளையே இராஜினாமாச் செய்த கட்சி தி.மு.கவே என்றும் அவர் கூறியுள்ளார்.

கலைஞர் கருணாநிதி கூறிய கருத்துக்கு ஈழத்தமிழ் மக்கள் எதிரானவர்கள் அல்ல. அதே நேரம் காலஞ்சென்ற எம்.ஜி.இராமச்சந்திரன் ஈழத்தமிழர்களுக்கு வழங்கிய காத்திரமான உதவிகளையோ, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழகப் பொதுச் செயலாளர் வை. கோபாலசாமி ஈழத் தமிழர்களுக்காக குரல் கொடுத்து சிறை சென்றதையே மறந்து விட முடியாது.

அத்துடன் பழ.நெடுமாறன், தொல்.திருமாவளவன், வீரமணி, சுப.வீரபாண்டியன் போன்றோர் ஈழத்தமிழர்களுக்கு ஆதரவாக வெளியி[illegible] கருத்துக்களையும் ஈழத்தமிழர்கள் மறந்து விட முடியாது.

எனவே கலைஞர் கருணாநிதி கூறுவது போல தி.மு.க மட்டுமே ஈழத்தமிழர்களுக்கு ஆதரவான கட்சி என்பதை மாற்றி தி.மு.கவும் ஈழத் தமிழர்களுக்கு ஆதரவான கட்சி என்பதை ஏற்றுக் கொள்ளலாம்.

எதுவாயினும் ஏனையவர்களை விட கலைஞர் கருணாநிதியின் ஆதரவு தற்போது முக்கியமானதாக உள்ளது.

தமிழகத்தின் முதல்வர் என்பதற்கு அப்பால் மத்திய அரசில் செல்வாக்கு மிகுந்தவர் என்பதனாலும் அவரின் ஆதரவை ஈழத்தமிழர்கள் வேண்டி நிற்கின்றனர்.

ஆனால் ஈழத்தமிழர்களுக்கு ஆதரவான கட்சி தி.மு.க மாத்திரமே என அழகிய தமிழில் [illegible]னித்தரமாக கூறுவதுடன் கருணாநிதியின் ஆதரவு நின்றுபோய் விடுகிறது.

தற்போது இருக்கக் கூடிய சூழ்நிலையில் வன்னி மக்கள் போரின் கொடூரத்தை அனுபவித்து வருகின்றனர்.

இச் சந்தர்ப்பத்தில் அவர்களுக்கு உதவிக் கரம் நீட்டாவிடில் அவர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகிவிடும். எனவே கலைஞர் கருணாநிதி தி.மு.கவே ஈழத்தமிழர்களுக்கு ஆதரவான கட்சி என்று கூறுவதை விடுத்து அதனைச் செயலில் காட்டவேண்டும்.

ஈழத்தமிழர்களை உரிமையுடைய –சுதந்திரமான –பாதுகாப்பான இனமாக ஆக்குவதிலேயே அவரின் ஆதரவு தேவைப்படுகின்றது.

தமிழகத்தில் முதல்வராக – மத்தியில் செல்வாக்கு மிக்க தலைவராக இருக்கக் கூடிய கலைஞர் கருணாநிதியின் தி.மு.க ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக இருக்கும் போது இலங்கை மண்ணில் தமிழ் மக்கள் விமானத் தாக்குதல்களுக்கும் எறிகணை வீச்சுக்கும் பலியாகிப்போகும் பரிதாபம் நடக்கிறதெனில் கருணாநிதியே தான் கூறிய கருத்தையிட்டு தலைகுனிய வேண்டும்.

இலங்கை மண்ணில் அவலப்படும் தமிழ் மக்களுக்கு நீதியான ஓர் தீர்வைப் பெற்றுத் தந்த பின்னர் கருணாநிதி இதைக் கூறுவாராயின் நாம் எல்லாம் கரகோஷம் போட்டு மகிழ்ந்திருப்போம்.

இதைவிடுத்து மர நிழலிலும் –உண்ண உணவின்றியும் பரிதவிக்கும் இக்கட்டான வன்னிக் கள நிலையில் கலைஞர் இவ்வாறு கூறியிருப்பது எங்கள் வேதனையை இரட்டிப்பாக்கியுள்ளது.

## இலங்கைக் கடற்படையால் இந்திய மீனவர் தாக்கப்படுவதைத் தடுக்க விசேட திட்டம்

### இரு நாட்டு வெளிவிவகார அமைச்சர்கள் இணக்கம்

இலங்கை கடல் எல்லையில் இந்திய மீனவர்கள் தாக்கப்படும் சம்பவங்களை கட்டுப்படுத்துவதற்காக பொதுவான ஓர் திட்டத்தை மேற்கொள்ள இணக்கம் தெரிவிக்கப்படுள்ளது. இரு நாட்டு வெளிவிவகார அமைச்சர்களான ரோஹித போகொல்லகம மற்றும் பிரணாப் முகர்ஜி ஆகியோருக்கு இடையில் நேற்று முன்தினம் நடைபெற்ற சந்திப்பின் போது இந்த திட்டம் குறித்து ஒப்புதல் தெரிவிக்கப் பட்டுள்ளது. இலங்கை கடற்பரப்பிற்குள் அத்துமீறி பிரவேசிக்கும் இந்திய மீனவர்கள் இலங்கை கடற்படையினர் தாக்குதல் மேற்கொள்வதாக இந்திய வெளிவிவகார அமைச்சர் பிரணாப் முகர்ஜி சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை இந்த சந்திப்பின்போது இலங்கையில் மாகாணசபை தேர்தல்கள் குறித்து கலந்துரையாடப் பட்டதாகவும் அந்தத் தகவல்கள் வெளியிடப்படவில்லை எனவும் பீ.ரீ.ஐ.செய்தி சேவை தகவல் வெளியிட்டுள்ளது. (அ-6)

## யோகாசனக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரி மாணவர்களின் நன்மைகருதி இன்று வெள்ளிக்ழமை யோகாசனக் கண்காட்சியொன்று நடாத்தப்படுகின்றது.

இந்த யோகாசனக் கண்காட்சி கல்லூரி அதிபர் என்.தெய்வேந்திரராஜா தலைமையில் நடைபெறும்.

பருத்தித்துறை தும்பளை யோகசாந்தி நிலைய இயக்குநர் ரீ.தேவராஜேந்திரனின் வழி நடத்தலில் யோகாசபைப் பயிற்றுநர் ரீ.ஶ்ரீகாந் யோகாசனக் காட்சிகளைக் காண் பிக்கவுள்ளார். (ஓ-52)

## ஆசிரியர் தினம்

யாழ்ப்பாணக் கல்வி வலயத்தின் யாழ்.கல்விக் கோட்டம் நிகழ்தும் ஆசிரியர் தினம் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்குச் சென்பற்றிக்ஸ்கல்லூரி மண்ட பத்தில் யாழ்.கோட்டக் கல்விப் பணிப்பாளர். திருமதி.வ.சிவபாலன் தலைமையில் நடைபெறுஉள்ளது.

நிகழ்வில் நல்லை ஆதீனம் வண–ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞான தேசிக பரமாச்சாரிய சுவாமிகளின் குருமுதல்வர் அருட்திரு கலாநிதி யஸ்ரின் பேர்னாட் ஞானப் பிரகாசம் ஆகியோரின் ஆசியுரையும் இடம் பெறும். தொடர்ந்து யாழ் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி.அ.வேதநாயகம் வாழ்த்துரை வழங்கவும், கல்விப் பணிப்பாளர்களைக் கௌரவித்தலும், ஆசிரியர் ஆக்கப்பாடலும் இடம் பெறும்.

அதனைத் தொடர்ந்து யாழ் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் கலாநிதி. நா.சண்முகலிங்கன் மேலதிக மகாணக் கல்விப்பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம், தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன், மல்லாக நீதிபதி திருமதி.ச.இளங்கோவன், பிரபல வர்த்தகர் இ.எஸ்.பி.நாகரெத்தினம், யாழ் போதனா வைத்தியசாலை வைத்திய கலாநிதி திருமதி. ஜி.பவானி ஆகியோரின் வாழ்த்துக்களும் ஆசிரியர்களைக் கௌரவித்தல் மற்றும் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறும். (ஓ)

## கோபுர கலசங்களே!

(ஆசிரியர் தினத்தை யொட்டி இக்கவிதை பிரசுரமாகிறது)

ஓ! சமகாலத்து ஆசிரியரோ!
தெரிகிறது
சிரிப்பெனும் முகவரியை
தொலைத்துவிட்டுத் தேடுவது
கணிப்பீடு, மதிப்பீடு
செயற்றிட்டம், முன்னாயத்தம்
பின்னூட்டல், பரிகாரம்
பாடத்திட்டம், பாடக்குறிப்பு
பெரியதொரு பட்டோலைக்குள்
உங்கள் சிந்தனை பாழாகிப்போன
சோகம் தெரிகிறது
சுயசிந்தனையில்
சுய அறிவூட்டலில்
அதற்கெல்லாம் ஏது நேரம்
ரீம் வருகிறதென்ற அழுத்தம்
உங்கள் இதயத்துடிப்பை
உயர்த்துகிறதாமே!
படிப்பித்தலைக் கைவிட்டு
பதிவை மட்டும் ஒழுங்காக்கினால்
உங்களுக்கும் உயர்ந்த புள்ளியாம்
முன்னைய வாத்திமார்
செய்த ஊழ்வினை
உங்களை வந்து உறுத்துது
புள்ளிபோட்ட பாவம் -இப்போ
உங்களுக்கும் புள்ளி இடுகுது
குறைந்த புள்ளி எடுத்த ஆசிரியரின்
தலையில் குட்டுவது யார்?
மாநாடு கூடி மக்குப் பிள்ளை
என்று முடிவெடுத்தாலும்
ஆச்சரியத்திற்கு என்ன இருக்கு
ஆசிரியத் தொழில்
புனிதம் என்ற சொல்லை
புதைகுழியில் தோண்டி எடுத்து
தொல்லியல் ஆய்வோர்
சுரண்டிச் சோதித்தாலும்
கிறிஸ்துவுக்கு முன் என்றுதான்
சொல்லி முடிப்பர்
பரவாயில்லை உலகில்
பாதுகாக்கும் பகுதியில்
நீங்களும் இடம்பிடித்துக் கொண்டீர்கள்
சிறுவர் உரிமைக்குப் பின்
உங்கள் தினம் தான் வருகிறது
மாலையிட்டு மரியாதை செலுத்தி
மகா குடமுழுக்கு நடக்கிறது
மீண்டும் நித்திய பூசையில்.
நிகழும் தவறுகளை
நீங்கள் தாங்குவதற்காய்!
தங்கக் கலசங்களே!
இடிகள் தாக்கலாம்-உங்களை
மின்னல்கள் உரசி முழக்கம் போடலாம்
கோபுர கலசங்கள் நீங்களே!
மகா குடமுழுக்கும் உங்களுக்கே!
உங்களிடம் ஒப்படைத்த
மாணவச் செல்வங்களை
தரணியிலே உயர்த்தி விடுங்கள்
உங்களுக்கு நீதிபதி உங்கள் மாணவரே
மாணவர் உள்ளத்தின் உயர்ந்த கோபுரங்களே
தரிசனங்கள் உங்களுக்காகக் காத்திருக்கின்றன
தாருங்கள் உங்கள் அறிவொளியை

-திருவெண்காடன்

## வெள்ளி நற்சிந்தனை

### பக்தியின் மொழி தமிழ் 40

வழிபாட்டில் மனங்கொள்ளாது வாழ் நாளை வீணே கழிப்பவர் பலர் உளர். அவர்களுடைய உள்ளத்திலே இறைவனைப் பற்றிய எண்ணம் எழாது. தமது மனித முயற்சியால் அனைத்தையும் அடைய முடியும் என்ற இறுமாப்பும் அவர்களிடம் இருக்கும். இத்தகையவர்களை வழிபாட்டிற்கு திருப்புவது சற்றுக் கடினமான செயல் தான். எனினும் எமது முன்னோரது வரலாற்றை நோக்கினால் இதனை எளிதில் செயற்படுத்த வழி கிடைக்கும்.

அப்பருடைய வாழ்க்கைவரலாறு வழிபாட்டில் ஈடுபட மறுப்பவருக்கு ஒருநல்லறிவைக் கொடுக்கவல்லது. வாழ்க்கையில் அடுத்தடுத்துஎதிர்கொண்ட துன்பங்கள் அவரைவழிபாட்டில் நம்பிக்கை இழக்க வைத்தனர். காலம் காலமாக பெற்றோர் கைக்கொண்ட வழிபாட்டு மரபால் எதுவிதபயனும் இல்லை என முடிவு செய்து சைவ வாழ்வியலை கைவிட்டு சமண சமய நெறியிலே சென்று இணைந்து கொண்டார். ஆனால் அங்கு அவர் எதிர்பார்த்தநிறைவான வாழ்வையும் மன அமைதியையும்பெற முடியவில்லை. மீண்டும் சைவ வாழ்வியலுக்கு திரும்பி வருகிறார். தமதுமுன்னோரது வழிபாட்டு நெறியே வாழ்க்கைக்கு உகந்தது என மன நிறைவடைகிறார்.

அவருடைய பட்டறிவு தமிழ் பாடல்களை பாட வைத்தது. தனக்கு ஏற்பட்ட பக்தி உணர்வை பிறரும் அறிய வேண்டும் என எண்ணுகிறார். இறைவனைப்பற்றி பாடுவதற்கு ஒரு பரவச நிலை வேண்டும். இறைவனை நினைக்கும் போதும் எண்ணும் போதும் ஏற்படும் உணர்வுகளைச் சொல்லால் விளக்க அப்பர் முனைந்த போது அவை தேவாரப்பாடல்களாக அமைந்தன. பல நாட்களாக இறைவனைப் பாடுவதற்கு ஒரு பயிற்சி தேவை. எல்லோரும் ஏத்திப்பாடும் இறைவனை எப்படி பாட முடிந்தது என்பதை ஒருபாடலில் அப்பர் மிகத் தெளிவாகப் புலப்படுத்தியுள்ளார். தனது உள்ளத்திலே ஊறும் இறை உணர்வை பல்வேறு சுவைகளோடு ஒப்பிட்டுச்சொல்கிறார். மனிதர் அறிந்த சுவைகள் மூலம் இறையுணர்வைப் பெறலாம் என்பதைக்காட்டுகிறார்.

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

இனிமையான தேனை, அமுதத்தை ஆவின் பாலை தித்திப்பான இனிய கரும்பை உண்ணும் போது ஏற்படும் மன மகிழ்வை இறைவனை உள்ளத்தில் நினைக்கும் போது பெறலாம் என்கிறார். நான் பல காலம் இந்த் இனிமையான வாழ்வியலை கைவிட்டு இருந்தேன் என மனம் வருந்துகிறார். சுவையை நினைத்து மகிழும் இனிய உணர்வு எல்லோரும் அறிந்ததே இனிமையானவற்றை ஒவ்வொன்றாக் எண்ணிப் பார்த்து அவற் றைச் சுவைக்க மனித நிலையில் விரும்புவது இயல்பே. இந்த அனுபவத்தையே அப்பர் பாடியுள்ளார்.

"பத்திமையாற் பணிந்தடியேன் தன்னைப் பன்னாட் பாமாலை
பாடப் பயில்வித்தானை
எத்தேவு மேத்து மிறைவன்றன்னை யெம்மானை
யென்னுள்ளத்துள்ளே யூறும்
அத்தேனை யமுதத்தை யாவின் பாலை யன்னிக்கும்
தீங்கரும்பையரனை யாதிப்
புத்தேளைப்புள்ளிருக்கு வேளூரானைப் போற்றாதே யாற்றநாள்
போக்கினேனே"

# மனித உரிமைகள் உள்ளிட்ட உடன்படிக்கைகளை அமுல்படுத்தாமையே ஜி.எஸ்.பி. கிடைக்காமைக்கு காரணம்

## யுத்தம் அல்ல என்கிறார் ஐ.தே.க.,எம்.பி லக்ஸ்மன் கிரியெல்ல

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்தை இலங்கை அரசாங்கம் நிறுத்தினால் மட்டுமே ஜி. எஸ். பி. பிளஸ் வரிச் சலுகை வழங்கப்படும் என உலகில் எந்தவொரு நாடும் கூறவில்லை. சர்வதேச ரீதியில் கைச்சாத்திடப்பட்ட 27 உடன்படிக்கைகளை அரசாங்கம் மீறி செயற்படுவதனால் அவை தொடர்பில் விசாரணைகளை நடத்த வேண்டுமென்றே ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது என்று ஐ.தே.க. எம். பி. லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

வெளிநாட்டு அமைச்சர் ரோஹித போகொல்லாகமவும் அரசாங்கத்துக்கு முட்டுக் கொடுக்கும் சில அரசியல் கட்சிகளும் யுத்தம் நிறுத்தப்பட்டால் மட்டுமே ஜி. எஸ். பி. பிளஸ் வரி கிடைக்கும் என்ற பிரசாரத்தை மேற்கொண்டு வருகின்றன. இது வெறும் மாயையாகும் என்றும் அவர் மேலும் கூறினார்.

கொழும்பில் புதன்கிழமை இடம் பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்து தெரிவிக்கையிலேயே லக்ஸ்மன் கிரியெல்ல எம். பி. இதனைத் தெரிவித்தார்.

இங்கு அவர் மேலும் கூறியதாவது, உண்மையில் ஜி. எஸ். பி. வரிச்சலுகை கிடைக்காமைக்கு யுத்தமல்ல காரணம். மனித உரிமைகள் உட்பட பல்வேறு விடயங்கள் தொடர்பாக ஐ. நா. மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்துடன் கைச்சாத்திட்ட 27 சர்வதேச உடன்படிக்கைகளை அமுல்படுத்தாததே இதற்கு காரணமாகும்.

இவை தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட பின்னரே வரிச் சலுகையை வழங்குவது தொடர்பில் தீர்மானிக்க முடியுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது எமது நாட்டின் இறைமையை மீறுவதாகுமென ஒரு சிலர் பொய்ப் பிரசாரம் செய்து மக்களை ஏமாற்றுகின்றனர்.

சர்வதேச ரீதியில் கைச்சாத்திடப்படும் உடன்படிக்கைகளை அமுல்படுத்தவோமென்ற உறுதியை நாம் வழங்கியுள்ளோம். எனவே அமுல்படுத்தாமை தொடர்பில் விசாரணை செய்வது எவ்வாறு குற்றமாகும்.

மகேஸ்வரன் எம்.பி. கொலை செய்யப்பட்டார். அமைச்சர் ஒருவரே கொலையாளி யாரென தெரிவித்திருந்தார். சாட்சியங்கள் உள்ளன. ஆனால் விசாரணைகள் மந்த கதியிலேயே இடம் பெறுகின்றன. ஜோசப் பரராஜசிங்கம் எம். பி. கொலை செய்யப்பட்டார். கொலையாளி தொடர்பில் ஜனாதிபதிக்கு தகவல்கள் வழங்கப்படடன. ஆனால் எதுவிதமான முன்னேற்றங்களும் இல்லை.

ஆட்கடத்தல், கப்பம் கோரல்கள், சுயாதீன ஆணைக்குழுக்கள் அமைக்கப்படாமை, மூதூரில் கொலை செய்யப்பட்ட 17 தனியார் தொண்டு நிறுவனப் பணியாளர்கள் தொடர்பிலான விசாரணைகள் துரிதப்படுத்தப்பட வில்லை. இவ்வாறான குற்றச்சாட்டுக் களையே ஐரோப்பிய ஒன்றியும் ஐ. நா.வும் இலங்கைக்கு எதிராக முன் வைத்துள்ளன.

பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தத்தை அரசாங்கம் நிறுத்த வேண்டுமென எந்தவொரு இடத்திலும் தெரிவிக்கப்படவில்லை: ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஐ. நா. இணையத்தளங்களை பார்வையிட்டால் இந்த உண்மையை தெரிந்துகொள்ள முடியும்.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வை அரசாங்கம் முன்வைக்காமையும் இதற்கு ஒரு காரணமாகும். இந்த வரி இரத்துச் செய்யப்படுமானால் நேர டியாக இரண்டு இலட்சம் பேர் தொழில்களை இழப்பார்கள். மறைமுகமாக இவர்களின் உத வியில் வாழும் பத்து இலட்சம் பேர் பாதிக்கப்படுவார்கள்.

எனவே, அரசாங்கம் ஜீ. எஸ். பி. பிளஸ் வரியை பாது காத்துக் கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். (அ-6)

# கொழும்பு -காலி வீதியிலுள்ள தடைகள்

## உயர்நீதிமன்ற தீர்ப்பின் எழுத்து மூலமான அறிக்கை கிடைத்ததன் பின்னரே நடவடிக்கை எடுக்கப்படும்

### பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

கொழும்பு-காலி வீதியிலுள்ள வீதித் தடைகளை அகற்றுமாறு உயர்நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பின் எழுத்துமூலமான அறிக்கை கிடைத்ததன் பின்னரே அவ்வீதியிலுள்ள வீதித்தடைகளை அகற்றுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று பொலிஸ் திணைக்களம் அறிவித்துள்ளது.

உயர்நீதிமன்றத்தினால் வழங்கப்பட்டுள்ள தீர்ப்பின் அறிக்கை பொலிஸ் திணைக்களத்திற்கு இதுவரையிலும் உத்தியோகபூர்வமாக கிடைக்கவில்லை தீர்ப்பின் அறிக்கை எழுத்து மூலமாக கிடைத்ததன் பின்னரே வீதித்தடைகள் அகற்றப்படும் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ரஞ்சித் குணசேகர தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில், கொழும்பு காலி வீதியிலுள்ள சகல வீதித் தடைகளையும் அகற்றுமாறு உயர் நீதிமன்றம் கடந்த திங்கட்கிழமை வழங்கியுள்ள தீர்ப்பு தொடர்பில் ஊடகங்கள் வாயிலாகவே அறிந்து கொள்ள முடிந்தது. அந்த தீர்ப்பின் எழுத்துமூலமான அறிக்கை கிடைத்ததன் பின்னரே தீர்ப்பினை அமுல்படுத்த முடியும் என்றார்.

கொழும்பு காலி வீதியில் அமைக்கப்பட்டுள்ள வீதித்தடைகள் பொதுமக்கள் சுதந்திரமாக பயணம் செய்வதற்கான உரிமையை மீறும் வகையில் அமைந்துள்ளதாக சுட்டிக்காட்டியிருந்த உயர்நீதிமன்ற பிரதம நீதியரசர் சரத் என் சில்வா பொலிஸ் மா அதிபர் ஜயந்தவிக்ரமரட்ணவுக்கு உத்தரவிட்டிருந்ததுடன் கொழும்பு மாநகர சபைக்கு உள்ளிட்ட பகுதிகளில் வாகனங்கள் அநாவசிய[illegible]ன முறையில் நிறுத்தி வைக்கப்படுவதை தடை செய்யும் வகையில் போடப்பட்டுள்ள விளம்பரப்பலகைகள் தொடர்பாக எதிர்வரும் 20ஆம் திகதி மன்றில் ஆஜராகி விளக்கமளிக்குமாறு கொழும்பு மாநகர ஆணையாளருக்கு பணிப்புரை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(அ-6)

# அடுத்த ஆண்டுகளுக்கான படைத்துறை செலவீனம் இந்த ஆண்டைவிட 5ஆயிரம் கோடி அதிகரிப்பு

## மேலும் 2ஆயிரம் கோடி அதிகரிக்கலாம்- திறைசேரி மதிப்பீடு

(கொழும்பு)

அரசாங்கத்தின் 2009ஆம் ஆண்டுக்கான படைத்துறை செலவீனம் 21 ஆயிரம் கோடியாக மதிப்பிடப்பட்டுள்ளது. தேவை ஏற்படும் போது இதன் தொகை மேலும் 2 ஆயிரம் கோடியால் அதிகரிக்கலாம் என்றும் திறைசேரியின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அடுத்த ஆண்டிற்குரிய வரவு செலவுத்திட்டத்திற்கான குறை நிரப்பு பிரேரணை எதிர்வரும் புதன்கிழமை 8ஆம் திகதி பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்காவினால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

அதற்கான முன்னோடி ஆய்வறிக்கைகள் நிதியமமைச்சின் அதிகாரிகளினால் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

இதன் அடிப்படை யிலேயே 2009ஆம் ஆண்டுக்குரிய படைத் துறை செலவீனம் 21 ஆயிரம் கோடி என்று மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதாக கொழும்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த 2007ஆம் ஆண்டு நவம்பர் மாதம் சமாப்பிக்கப்பட்ட 2008ஆம் ஆண்டுக்குரிய வரவு செலவுத்திட்டத்தில் படைத்துறைகளுக்கான செலவீனம் 16 ஆயிரம் கோடி என மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது.

ஆனால் அடுத்த 2009ஆம் ஆண்டுக்கான செலவீனம் 5 ஆயிரம் கோடியால் அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர் நடவடிக்கையே இதற்கு பிரதான காரணம் எனவும் கொழும்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

குறிப்பாக நவீன போர்த் தளபாடங்கள் மற்றும் படைகளுக்கான ஆட்சேர்ப்புக்கள் போன்றவற்றுக்கே அதிகளவு நிதி செலவிடப் படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அதேவேளை புலிகளின் வானூர்திகளை தாக்கியழிக்கக்கூடிய மிக் 29 ரக வானூர்திகளை கொள்வனவு செய்வதாக இருந்தால் படைத்துறை செலவீனம் தற்போது மதிப்பீடு செய்யப்பட்டதை விட அடுத்த ஆண்டு நடுப்பகுதியில் மேலும் அதிகரிக்கலாம் எனவும் திறைசேரி அதிகாரிகளை மேற்கோள் காட்டி கொழும்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

வரவு-செலவுத்திட்டம் எதிர்வரும் நவம்பர் மாதம் நிதி அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

(அ-6)

# சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் அரசுக்கு எதிராக சதித்திட்டம் தீட்டின

## ஓய்வு பெற்ற சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் அறிக்கை

(கொழும்பு)

கடந்த காலங்களில் பல சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்கள் விடுதலைப் புலிகளைப் பலப்படுத்துவதற்குப் பயன்படுத்தப்பட்டமை தொடர்பான புலனாய்வு விசாரணை அறிக்கைகள் கிடைக்கப் பெற்றிருப்பதாக பாராளுமன்றத் தெரிவுக்குழு கூறுகிறது.

ஓய்வுபெற்ற சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் இந்த அறிக்கையை கடந்தவாரம் அரச சார்பற்ற நிறுவனங்கள் தொடர்பாக ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக்குழுவிடம் சமர்ப்பித்துள்ளனர்.

1999ஆண்டு முதல் 2000ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் விடுதலைப் புலிகளைப் பலப்படுத்துவதற்கு சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் பயன்படுத்தப்பட்டமை தொடர்பான ஆதாரங்களை உள்ளடக்கிய அறிக்கை தம்மிடம் சமர்ப்பிக்கப்பட்டதாக பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் தலைவர் விஜித ஹேரத் கூறினார். அவ்வாறான அரசசார்பற்ற நிறுவனங்கள் தொடர்பாக அப்போதைய அரசாங்கத்துக்கு அறிவித்தபோதும் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லையென அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருப்பதாக அவர் கூறினார்.

இந்த திட்டத்தைத் தயாரிப்பதற்கு சர்வதேச அமைப்புக்கள் கொழும்பிலுள்ள உல்லாச விடுதிகளில் கூடியிருந்தன. அவர்களின் ஒரேயொரு குறிக்கோள் அரசாங்கத்தைப் பலவீனப்படுத்தி விடுதலைப் புலிகளின் கரங்களைப் பலப்படுத்துவதே. நாட்டின் இறைமைக்கு எதிரான சதித்திட்டங்களே இவை என விஜித ஹேரத் கொழும்பு ஊடகமொன்றிடம் தெரிவித்தார்.

இவ்வாறான சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்களில் பெரும்பாலானவை ஐரோப்பிய ஒன்றியத்தைத் தளமாகக் கொண்டமைந்ததுடன் நோர்வேயையும் தளமாகக் கொண்டவை எனக் குறிப்பிட்ட அவர், விடுதலைப் புலிகளுக்கு உதவிவழங்கிய அரச சார் பற்ற நிறுவனங்கள் குறித்து தமக்கு ஏற் கனவே சில தகவல்க்ள் கிடைக்கப் பெற்றி ருந்ததாகவும் கூறினார்.

(அ-6)

# இலங்கை பாடசாலை கிரிக்கெட் வரலாற்றில் முதலாவது 'இருபது-20' கிரிக்கெட் தொடர்

## வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் இன்று ஆரம்பம்

உடல் ஆரோக்கியத்தையும், மன முரண்பாடுகளையும் நீக்குவது விளையாட்டுத் துறையாகும். இவ் விளையாட்டுத் துறையின் ஊடாக வரும் வெற்றி தோல்விகளை ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவம் மனித வாழ்வின் சமநிலையைப் பேணுகின்றது.

இந்நிலையில் பல்வேறு வகையான விளையாட்டுக்களை பயில்வதும் அதனை விளையாடுவது மட்டும் சமூக ஒற்றுமையை ஏற்படுத்தாது.

விளையாட்டுக்களை விளையாடும் அணிகளுக்கிடையில் போட்டிகளை நடத்துவதே சமூக ஒற்றுமையை ஏற்படுத்தி வரும்.

இதைக் கருத்தில் கொண்டு யாழ். மாவட்டத்தில் பாடசாலைகளுக்கிடையில், கழகங்களுக்கிடையில் என சகல விளையாட்டுக்களினதும் பல போட்டித் தொடர்கள் நடைபெற்று வருகின்றன.

இவ்விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி தோல்வி என்பது முடிபல்ல. சிநேகிதபூர்வமாக சாதனை படைப்பதே நோக்கமாகும்.

இதனடிப்படையில் இலங்கைப் பாடசாலைகளுக்கிடையேயான கிரிக்கெட் விளையாட்டின் தரத்தினை மேலும் உயர்த்துவதற்கும், பாடசாலைகளுக்கிடையே கிரிக்கெட் போட்டிகளை சர்வதேச ரீதியில் மேலும் இனம் காட்டிக் கொள்வதற்குமாக இலங்கையிலேயே முதற் தடவையாக யாழ்ப்பாணக் கல்லூரியினால் அழைக்கப்பட்ட யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான இருபது -20 கிரிக்கெட் தொடர் அறிமுகப்படுத்தப்படுகின்றது.

(கிரிக்கெட் விளையாட்டு பிரித்தானிய இராச்சியத்தினாலேயே உலகத்துக்கு அறிமுகப்படுத்தப்பட்டது. பிரித்தானிய சாம்ராச்சியக் குடியேற்ற நாடுகளுக்கும் இவ் விளையாட்டு பரவலாக்கப்பட்டது.)

ஐந்து நாட்களைக் கொண்ட நீண்ட காலத்தையும் மிகவும் அறிவு பூர்வமாக நிதானமாக ஆடுகின்ற தன்மையும் கொண்டது இவ்விளையாட்டு.

ஓர் அணியின் 11 வீரர்களை எதிர்த்து மற்றைய அணியின் இருவர் குறித்த நேரத்தில் ஆடுகளத்திலே சாதனை படைக்கும் மிகத் துல்லியமான விளையாட்டு இதுவாகும்.

ஆயினும் உலகத்தின் துரித வளர்ச்சி காரணமாக இவ்விளையாட்டினையும் துரித கதியில் ஆடவேண்டிய தேவை ஏற்பட்டது.



ஆவணப்படம்

எனவே போட்டியில் ஆடும் இரு அணிகளும் தலா 50 ஓவர்களில் ஆடுகின்ற ஒரு நாள் ஆட்டம் அறிமுகமாகியது.

இது சர்வதேச ரீதியில் வளர்ச்சியடைந்து வந்தபோது யாழ்.மாவட்டத்தில் இதனை முதல் முதல் அறிமுகப்படுத்தியது யாழ்ப்பாணக் கல்லூரியும் யாழ்.புனித பத்திரிசியார் கல்லூரியுமாகும்.

இது இன்றும் இராஜன் கதிர்காமர் வெற்றிக் கிண்ணத்திற்கான ஆட்டமாக இரு கல்லூரிகளுக்குமிடையில் நீண்டகாலமாக நடைபெற்று வருகின்றது.

மீண்டும் ஓர் முயற்சியாக கிராமிய நகர மட்டக் கிரிக்கெட் விளையாட்டினை சர்வதேச தரத்திற்கு உயர்த்தும் முயற்சியாக இன்றும் நாளையும் யாழ்ப்பாணக் கல்லூரி ஆடுகளத்தில் இருபது -20 கிரிக்கெட் தொடர் எட்டுப் பாடசாலை அணிகளுக்கிடையில் நடைபெறுகின்றது.

இந்த மாவட்ட ரீதியில் நடாத்தப்படுகின்ற இவ்விளையாட்டு -எதிர்காலத்திலே அகில இலங்கை ரீதியாக யாழ்ப்பாணக் கல்லூரி விளையாட்டுத் துறையினரால் நடாத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது என்பதை யாழ்ப்பாணக் கல்லூரி அதிபரும், யாழ். மாவட்ட பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத் தலைவருமாகிய நோயல் ஏ.விமலேந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணக் கல்லூரியினால் நடத்தப்படும் யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான இலங்கை ஸ்போட்ஸ் ஸ்பேஸ்ட், இலங்கை பாடசாலை கிரிக்கெட் சபை இணைந்து நடத்தும் இருபது -20 கிரிக்கெட் சுற்றுப்போட்டியினை தொடர்ந்து இலங்கைப் பாடசாலைகளுக்கிடையிலான இருபது -20 கிரிக்கெட் சுற்றுப்போட்டி நடைபெறவுள்ளது.

இவ்விளையாட்டில் வடக்கு மாகாண பாடசாலைகள் புறக்கணிக்கப்பட்டிருக்கின்றது என்ற செய்தி எமக்கு வேதனையைத் தந்தாலும் யாழ்ப்பாணக் கல்லூரியின் முயற்சி எமது மாவட்ட பாடசாலை மாணவர்களின் கிரிக்கெட் சாதனையை நிலை நிறுத்துவதற்கு ஓர் களம் அமைத்துக் கொடுத்துள்ளது.

இந்த வகையிலே தேசிய ரீதியிலான இச் சுற்றுப்போட்டிக்கு யாழ்.மாவட்டம் தகுதியுடையதென்பதை தேசிய ரீதியில் எடுத்துக் காட்டுவதற்கு இச் சுற்றுப்போட்டி சான்றாக அமைகின்றது.

மேலும் கிரிக்கெட் விளையாட்டினை ஆடுகின்ற பாடசாலைகளின் அதிபர்கள் முழு ஊக்கத்தையும் ஆதரவையும் வழங்கி வருகின்றனர்.

இன்று இலங்கையின் கிரிக்கெட் தரம் சர்வதேச ரீதியிலே பெற்ற உயர்ந்த தரத்தைப் போல யாழ்.மாவட்டத்தின் கிரிக்கெட் தரமும் உயரவேண்டும் என்பதே எல்லோருடைய எதிர்பார்ப்புமாகும்.

### யாழ். விளையாட்டுத் துறையில் மீண்டும் ஓர் மைல்கல்

இதனடிப்படையில் இலங்கையில் முதன் முதலாக அறிமுகப்படுத்தப்பட்டு நடைபெற்று வருகின்ற பாடசாலைகளுக்கிடையேயான இருபது -20 கிரிக்கெட் ஆட்டம் இதற்கு ஓர் மைல்கல் ஆகும்.

திரு.அன்ரன் சந்திரன் பிரான்சிஸ்
ஆசிரியர் ; யாழ்ப்பாணக் கல்லூரி

## கங்குலி தேர்வானது எப்படி?



இந்திய டெஸ்ட் அணியில் சௌரவ் கங்குலி தேர்வு செய்யப்பட்டது எப்படி என்பது தொடர்பாக பின்னணி விபரங்கள் தெரிய வந்துள்ளன.

சிறிகாந்த் தலைமையிலான புதிய தேர்வுக் குழு அவுஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் விளையாடவுள்ள இந்திய அணியை நேற்று முன்தினம் தேர்வு செய்தது.

இந்திய அணியில் கங்குலிக்கு வாய்ப்பளிக்கப்படுமா என்ற கேள்வி பரவலாக விவாதத்தை ஏற்படுத்தியது. இந்நிலையில் கங்குலி அணியில் தேர்வு செய்யப்பட்டார்.

மூத்த வீரர்கள் கௌரவமான முறையில் ஓய்வு பெற கிரிக்கெட் சபை ஒரு சமரசத் திட்டத்தை வகுத்திருப்பதாகவும் அதனடிப்படையிலேயே கங்குலி அணியில் தேர்வு செய்யப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

மூத்த வீரர்கள் ஓய்வுபெற டிசம்பர் மாதம் வரை அவகாசம் அளித்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

எனினும் கிரிக்கெட் சபைக்கு நெருக்கமான வட்டாரங்கள் இதனை திட்டவட்டமாக மறுத்துள்ளன. இத்தகைய திட்டமெதுவும் பரிசீலனையில் இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் கங்குலி தேர்வு செய்யப்பட்டது எப்படி என்பது தொடர்பாக பின்னணி விபரங்கள் வெளியாகியுள்ளன.

இந்திய அணியில் கங்குலியை தேர்வு செய்யலாமா வேண்டாமா என்பது குறித்து தேர்வுக்குழுவினரிடையே கடுமையான விவாதம் நடைபெற்றதாகவும் இந்த விவாதத்தின் போது கங்குலிக்கு எதிராக வலுவான வாதங்கள் அமையாதது அவருக்கு சாதகமாக முடிந்ததாகவும் கருதப்படுகிறது.

ஒரு சில தேர்வுக்குழுவினர் கங்குலிக்கு எதிராக முதலில் கருத்துத் தெரிவித்துள்ளனர். ஆனால் பயிற்சியாளர் மற்றும் அணியின் தலைவர் அவருக்கு எதிராக எந்தக் கருத்துக்களையும் கூறவில்லை.

மேலும் இளம் வீரர்களை அணியில் சேர்த்து ஊக்குவிக்கவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டபோது அவுஸ்திரேலியாவுக்கு எதிராக இந்தச் சோதனையை மேற்கொள்வது சரியல்ல என்று கூறப்பட்டது.

மேலும் கங்குலிக்கு பதிலாக சேர்க்கப்படக் கூடிய வீரர்கள் யாரும் அவரை விட மேம்பட்டவர்கள் அல்ல என்ற கருத்தும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று கங்குலி இலங்கைத் தொடரில் சிறப்பாக ஆடவில்லை என்று கூறப்பட்டதற்கு பதிலாக ஏனைய மூத்த வீரர்களும் இலங்கையில் சரியாக ஆடவில்லையே என்று கேட்கப்பட்டுள்ளது.

இதையடுத்து தேர்வுக்குழுவினரால் ஒருமித்த முடிபுக்கு வரமுடியவில்லை.

இத்தனையடுத்து வாக்கெடுப்பின் அடிப்படையில் முடிபெடுப்பதற்கு பதிலாக கங்குலியை தேர்வு செய்யலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(5)

## ரஷ்யாவின் இசின்பயேவாவிற்கு சிறந்த வீராங்கனை விருது

ஒலிம்பிக் கோல் ஊன்றிப் பாய்தல் சம்பியனும் உலக சாதனைக்குச் சொந்தக்காரருமான ரஷ்யாவின் இசின்பயேவா இந்த ஆண்டின் சிறந்த ஐரோப்பிய தடகள வீராங்கனையாக தேர்வு செய்யப்பட்டுள்ளார். ஐரோப்பிய தடகள கூட்டமைப்பு நடத்திய இந்த வாக்கெடுப்பில் பொதுமக்களும் ஊடகங்களும் வாக்களித்தன.

இதில் ரஷ்ய, கோல் ஊன்றிப் பாய்தல் வீராங்கனைக்கு அதிக வாக்குகள் கிடைத்துள்ளன. செக் குடியரசின் ஈட்டியெறிதல் வீராங்கனை பார்பரா ஸ்போடகோவா, பெல்ஜியத்தைச் சேர்ந்த உயரம் தாண்டுதல் வீராங்கனை டியா ஹெல்லாபாட் ஆகியோரை பின்னுக்குத் தள்ளி இசின்பயேவா முன்னணி பெற்றார். இந்த ஆண்டில் மட்டும் இசின்பயேவா 4 உலக சாதனைகளை நிகழ்த்தியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதற்கு முன்பு 2005 ஆம் ஆண்டும் இசின்பயேவா சிறந்த ஐரோப்பிய தடகள வீராங்கனையாக தேர்வு செய்யப்பட்டார். (5)

## முதல் டெஸ்டிற்கு மெக்கெய்ன் இல்லை

தோள்பட்டையில் ஏற்பட்டுள்ள காயம் காரணமாக இந்தியாவுடனான முதல் டெஸ்டில் விளையாடும் வாய்ப்பை அவுஸ்திரேலிய சுழற்பந்து வீச்சாளர் பிரைஸ் மெக்கெய்ன் இழந்துள்ளார்.

மெக்கெய்ன் உடல் தகுதியுடன் இல்லை. தோள்பட்டையில் அவருக்கு காயம் ஏற்பட்டுள்ளது என அணியின் பயிற்சியாளர் டிம் நில்சன் தெரிவித்தார்.

அவரது காயம் குணமாக குறைந்தது 2 வாரங்கள் ஆகும் எனத் தெரிகிறது.

அதனால் 2ஆவது டெஸ்டிலும் அவர் விளையாடாமல் போக வாய்ப்புகள் அதிகம் என்றார்.

இது குறித்து தேர்வுக் குழுவினரிடமும் பேச வேண்டியுள்ளது.

இன்னும் ஒரு வீரருக்கு காயம் ஏற்பட்டால் மாற்று வீரர்கள் ஏற்பாடு செய்ய வேண்டியது அவசியமாகி விடும் என்றார்.

மெக்கெய்னுக்கு காயம் ஏற்பட்டுள்ளதால் மற்றொரு சுழற் பந்து வீச்சாளரான ஜேசன் கிரெஜா முதல் டெஸ்டில் விளையாடுவது உறுதியாகி உள்ளது.

சுழற் பந்து வீச்சை சிறப்பாக விளையாடக் கூடிய மிகச் சிறந்த வீரர்களுக்கு எதிராக தனது திறமையை வெளிப்படுத்தும் வாய்ப்பு கிரெஜாவுக்கு கிடைத்துள்ளது. இந்தச் சவாலுக்கு அவர் தயாராக உள்ளார் என்றார் நில்சன். (5)

# இந்து ஆலயங்களில் திடீர் தேடுதல் குருமார்கள் உட்பட 11 பேர் கைது

## வலிகாமத்தில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் பகுதியில் உள்ள இந்து ஆலயங்களில் கடந்த 30 ஆம் திகதி இர்ாணுவத்தினர் மேற்கொண்ட திடீர் தேடுதலின் போது இரு ஆலயங்களின் குருமார்கள் உட்பட 11 பேர் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு மானிப்பாய்ப் பொலிஸாரின் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

மாகியப்பிட்டியில் கடந்த 29 ஆம் திகதி இராணுவத்தினர் மீது மேற்கொள்ளப்பட்ட கிரனைட் தாக்குதலையடுத்துப் பெருமளவு இராணுவத்தினர் குவிக்கப்பட்டு அப் பகுதியில் பாரிய தேடுதல் மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது 11 பேர் கைது செய்யப்பட்டு மல்லாகம் நீதிவான் திருமதி சரோஜினிதேவி இளங்கோவன் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இவர்களை அவசர காலச் சட்டத்தின் தடுத்து வைத்தல் கட்டளையின் கீழ் பாதுகாப்புச் செயலரின் அனுமதி கிடைக்கும் வரை மானிப்பாய்ப் பொலிஸாரின் தடுப்புக் காவலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

சண்டிலிப்பாய் கல்வளை முருகன் ஆலயத்தின் குருக்கள் அமிர்தலிங்கம்சர்மா பத்மரூபன் சர்மா, ஆலய பரிபாலன சபைத் தலைவர் கந்தர் செல்லையா, பரிபாலன சபையைச் சேர்ந்த திருமதி ரேணுகா சிறிஸ்கந்தராஜா மற்றும் சீரணி நாகம்மாள் ஆலயக் குருக்கள் குணானந்த சர்மா சோமஸ்கந்த சர்மா, உதவியாளர் குணானந்த சர்மா ஜோதீஸ்வர சர்மா, ஆலய பரிபாலன சபைத் தலைவர் நாகராஜா நடராஜா மற்றும் தம்பையா பரமசோதி, கந்தையா சற்குணராஜா, குணராஜா பிரணவன், மாகியப்பிட்டியைச் சேர்ந்த நாகராஜா விஜயராஜா ஆகியோரே தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். (எ-5)

# ஈழத் தமிழருக்கு ஆதரவான உண்ணா விரதப் போராட்டத்தை அ.தி.மு.க. திடீரெனப் புறக்கணித்தது

இலங்கைத் தமிழர் மீது நடத்தப்படும் தாக்குதல்கள் நிறுத்தப்படவேண்டும். இலங்கை அரசுக்கு எவ்வித இராணுவ ஒத்துழைப்பும் வழங்கக்கூடாது. அரசியல் ரீதியான தீர்வு காண வேண்டும் என மத்திய அரசு இலங்கை அரசை வற்புறுத்தவேண்டும் போன்ற கோரிக்கைகளை வற்புறுத்தி இந்திய கம்யூனிஸ்ட் மாநில அளவில் நடத்திய உண்ணா விரதப் போராட்டத்தில் மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட், ம.தி.மு.க., தேசிய முற்போக்கு திராவிடக் கழகம், விடுதலைச் சிறுத்தைகள், புதிய தமிழகம் உட்பட் பல்வேறு கட்சிகள் பங்கேற்றன. ஆனால் அ.தி.க.மு.க. ஆர்பாட்டத்தில் கலந்து கொள்ளவில்லை. மாநிலத்தின் அனைத்து மாவட்ட தலை நகரங்களிலும் ஆர்பாட்டத்தில் தனது கட்சியினர் கலந்து கொள்வர் என்று அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா அறிவித்திருந்தும் ஏன் அக்கட்சி இப்போது புறக்கணித்தது என்பதற்கு எவ்வித விளக்கமும் அளிக்கப்படவில்லை. (சு)

## இடம்பெயர்ந்துள்ள தமிழ்...

அவர் மேலும் கூறினார்.

தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் மாநாட்டில் கல்ந்து கொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அதன்போது கருத்துத் தெரிவித்த அமைச்சர் தொடர்ந்து கூறியதாவது,

வடக்கில் மோதல்கள் அதிகரித்துள்ள நிலையில் தமிழ் மக்கள் தொடர்ந்தும் இடம்பெயர்ந்து வருகின்றனர். இவ்வாறு இடம்பெயர்ந்துள்ள சுமார் 2 இலட்சம் மக்கள்தொடர்பில் இலங்கை அரசாங்கம் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கவில்லை என்றும் அம்மக்கள் மீது அரசாங்கத்திற்கு எவ்வித அக்கறையில்லையெனவும் சர்வதேச நாடுகளும் பல்வேறு அரச சார்பற்ற அமைப்புக்களும் அரசாங்கத்தின் மீது பல்வேறு குற்றச்சாட்டுக்களை சுமத்தி வருகின்றன.

இதனாலேயே வன்னியில் மனிதாபிமானப் பணிகளை மேற்கொண்டு வரும் தொண்டு நிறுவனங்களையும் அங்கிருந்து உடனடியாக அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வருமாறு அழைப்பு விடுத்துள்ளது என்றும் அக் குற்றச்சாட்டுக்களின்போது தெரிவிக்கப்பட்டன.

உண்மையில் வன்னியில் இடம்பெயர்ந்துள்ள தமிழ் மக்கள் மீது சர்வதேச நாடுகளை விடவும் அரசாங்கத்திற்கு அக்கறை அதிகம். அவர்களது குற்றச்சாட்டுக்களை – எண்ணி அரசாங்கம் ஒருபோதும் பின்வாங்காது.

இடம்பெயர்ந்துள்ள தமிழ் மக்கள் எமது சகோதர, சகோதரிகளே. அவர்கள் குறித்து எமக்கில்லாத அக்கறை வேறு எவருக்குண்டு என அவர் கேள்வி எழுப்பினார்.

அவர்கள் மீது அக்கறை உள்ளபடியாலேயே தொண்டு நிறுவனங்களின் உதவியுடன் உலர் உணவுப் பொருள்களை அனுப்ப அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இந் நடவடிக்கைகள் இன்று (நேற்று) முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதன் முதல் கட்டமாக 800 மெற்றிக் தொன் உணவுப் பொருள்களை அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றார். (ச-5)

## ஐ.நாவின் உணவு வாகன அணி...

சாவடியில் நிறுத்தப்படாமல் வன்னிப் பகுதிக்கு அனுப்பி வைக்கப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

வன்னிப் பகுதிக்கு லொறிகளில் உணவுப் பொருள்கள் அனுப்பி வைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்ட போதிலும் அந்த ஏற்பாடு முழுமையடையவில்லை. இது குறித்து உலக உணவுத் திட்டத்தின் இலங்கைக்கான பதில் வதிவிடப் பிரதிநிதி மேட்ஸ் வைல்ஸ்ட்ரப் அம்மையார் பி.பி.சிக்குத் தெரிவித்ததாவது,

60 வண்டிகளில் பொருள்களைக் கொண்டு செல்ல திட்டமிடப்பட்டிருந்தாலும் கூட உலக உணவுத் திட்டத்தின் 30 லொறிகள் தனியார் வர்த்தகர்களின் 21 லொறிகள் அடங்கலாக 51 வண்டிகளில் 650 தொன் உணவுப் பொருள்கள் அனுப்பி வைக்கப்பட்டன.

இந்தப் பொருள்கள் ஏற்கனவே வண்டிகளில் ஏற்றப்பட்டு விட்டன. இந்த வாகனத் தொடரணி செல்வதை நாங்கள் மேலும் தாமதமாக்க விரும்பவில்லை.

வன்னியில் உணவுப் பொருள்கள் அவசரமாகத் தேவைப்படுகின்றன. உள்ளூரில் இடம்பெயர்ந்துள்ள 2 இலட்சம் மக்கள் உணவை எதிர்பார்த்திருக்கின்றார்கள். அவர்களுக்குக் கடைசியாக கடந்த செப்ரெம்பர் மாதம் 15 ஆம் திகதியளவில் உலக உணவுத் திட்டத்தின் உணவுப் பொருள்கள் விநியோகிக்கப்பட்டன.

இப்போது 2 வாரங்களுக்கும் மேலாகி விட்டன. அவர்களுக்கு அங்கு கொடுப்பதற்கு உணவுப் பொருள்கள் இல்லை. ஒவ்வொரு வாரமும் இதேயளவு லொறிகளில் உணவுப் பொருள்களை அங்கு அனுப்பி வைப்பதற்கு நாம் திட்டமிட்டிருக்கின்றோம் என்றார்.

மனிதாபிமானப் பணியாளர்களுக்கும் மனிதாபிமானப் பணிகளுக்கும் உரிய பாதுகாப்பு வழங்கப்படும் என்று இலங்கை அரசும் விடுதலைப்புலிகளும் எமக்கு எழுத்து மூலமாக உறுதியளித்திருக்கின்றார்கள்.

அத்துடன் நாங்கள் ஏ-9 வீதியில் நேராக எமது பயணத்தை மேற்கொள்ளப் போவதில்லை. மாங்குளம் சந்தியிலிருந்து வேறு வீதியூடாகவே நாங்கள் செல்வோம். நாங்கள் கொண்டு செல்கின்ற பொருள்களை இடம்பெயர்ந்த மக்கள் நெருக்கமாக குடியிருக்கின்ற 4 பிரதேசங்களிலுள்ள களஞ்சிய சாலைகளில், அதிகாரிகளிடம் ஒப்படைப்போம் என உலக உணவுத் திட்டத்தின் இலங்கைக்கான பதில் வதிவிடப் பிரதிநிதி தெரிவித்தார்.

இந்த உணவு வாகனத் தொடரணி வன்னிப் பகுதிக்குப் புறப்படுவதை அவதானிப்பதற்காக மீள்குடியேற்ற அமைச்சர் றிசாட் பதியூதீன், வவுனியா அரசாங்க அதிபர் திருமதி பி.எம்.சாள்ஸ் ஆகியோரும் சம்பவ இடத்திற்குச் சென்றிருந்தனர்.

51 லொறிகளிலே அரிசி, சீனி, மா, பருப்பு, மரக்கறி எண்ணெய் போன்ற வகைகள் அனுப்பப்படுகின்றது. அத்தனையும் இலவசமாக அந்த அகதிகளுக்கு வழங்குவதற்காக உலக உணவுத் திட்டம் அதனுடைய ஆதரவோடு இந்தப் பொருள்களை அரசாங்கம் அனுப்பி வைத்துள்ளதாக அமைச்சர் றிசாட் பதியுதீன் தெரிவித்தார். (ச-3,5)

## கிளிநொச்சி...

யங்கள் அழிந்தும் சேதமாகியும் உள்ளன.

கிளிநொச்சி மருத்துவமனையைச் சூழவும் எறிகணைகள் வீழ்ந்து வெடித்துள்ளன. இந்த எறிகணை தாக்குதலினால் கிளிநொச்சி நகரம் மூன்று மணிநேரம் அதிர்ந்தது.

படையினர் பெரும் தாக்குதலினை தொடுக்கும் வகையில் முன்னோட்டமாக இத்தாக்குதலை நடத்தியிருக்கலாம் என்று கருதப்படுகின்றது. (ச-5)

## பாதுகாப்புச் செலவீனமாக...

18.7 பில்லியன் முதலீடுச் செலவுக்குமென மொத்தமாக ஒதுக்கப்பட்டிருப்பதாக நிதியமைச் சுத் தகவல் தெரிவிக்கின்றது.

இதில் இராணுவத்துக்கே அதிகளவு ஒதுக்கீடாக 78.3 பில்லியன் ரூபா மீண்டெழும் செலவுகளுக்கும் 5.6 பில்லியன் முதலீட்டுச் செலவுக்குமென ஒதுக்கப்பட்டுள்ளது.

கடற்படைக்கு 22.6 பில்லியன் ரூபா மீண்டெழும் செலவுகளுக்கும் 4.9 பில்லியன் ரூபா முதலீட்டுச் செலவுகளுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது.

விமானப் படையின் மீண்டெழும் செலவுகளுக்கு 16 பில்லியன் ரூபாயும் முதலீட்டுச் செலவுகளுக்கு 4.5 பில்லியன் ரூபாயும் ஒதுக்கப்பட்டிருப்பதுடன், பொலிசாரின் மீண்டெழும் செலவுகளுக்கு 32.8 பில்லியன் ரூபாயும் முதலீட்டுச் செலவுகளுக்கு 2.8 பில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

விடுதலை புலிகளுக்கு எதிரான படை நடவடிக்கைகளில் முப்படையினரும் தீவிரமாக ஈடுபட்டுவருகின்ற நிலையில், அதிகளவு ஆளணி மற்றும் நவீன படைக்கலக் கொள்வனவுகளுக்காகவே செலவீனங்கள் அதிகரித்திருப்பதாக இலங்கை வணிக இணையத்தளம் ஒன்று சுட்டிக்காட்டியுள்ளது.

கிளிநொச்சியைப் படையினர் நெருங்கி வரும் நிலையில் படை நடவடிக்கைகள் தீவிரமடைந்திருக்கிறது.

கடற்புலிகளுக்கு எதிரான தாக்குதல்களை கடற்படையினர் அதிகளவு தீவிரப்படுத்தியிருப்பதுடன், விமானப் படையினர் அநேகமாக ஒவ்வொரு நாளும் வான் தாக்குதல்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

பொலிசாரினது விசேட பரா பிரிவினரும் புலிகளுக்கு எதிரான தாக்குதல்களில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இவையே பாதுகாப்புச் செலவீன அதிகரிப்புக்குக் காரணம் என குறிப்பிடுகிறது.

2009ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட முன்மொழிவுகள் மீதான முதல் வாசிப்பு ஒக்டோபர் 9இலும் இரண்டாம் வாசிப்பு நவம்பர் 6இலும் இடம் பெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. 2008ஆம் ஆண்டுக்கான பாதுகாப்புச் செலவீன ஒதுக்கீடு 166.44 பில்லியனான, இருந்தது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (ச-5)

## அரசியல் துறைச் செயலகம் மீது...

இரண்டு விமானங்கள் தாழப் பறந்து இந்தப் பிரதேசத்தில் 16 குண்டுகளை வீசியதாகவும் இதில் விடுதலைப்புலிகளின் அரசியல் துறை செயலகம்–சமாதான செயலகம் மற்றும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் உட்பட முக்கிய சர்வதேச தொண்டு நிறுவனங்கள், விடுதலைப்புலிகளுடன் தொடர்பு கொள்ளும் அலுவலகம் போன்ற முக்கிய அலுவலகக் கட்டடங்கள் அழிந்துள்ளதாகவும் அந்தப் பிரதேசத்திலுள்ள 16 வீடுகள் சேதமடைந்திருப்பதாகவும் விடுதலைப் புலிகள் கூறியுள்ளனர்.

விடுதலைப்புலிகளின் முக்கிய தலைவர்களை; பன்னாட்டு இராஜதந்திரிகளும் முக்கியஸ்தர்களும் குறிப்பாக நோர்வே நாட்டின் முக்கிய தலைவர்கள், இராஜதந்திரிகள் ஆகியோர் இந்த சமாதான செயலகத்திலும் அரசியல்துறைச் செயலகத்திலுமே சந்தித்துப் பேச்சுக்கள் நடத்துவது வழக்கம்.

ஐ.நாவின் முக்கிய அதிகாரிகளும் அண்மையில் இந்தச் செயலகங்களிலேயே விடுதலைப்புலிகளின் முக்கியஸ்தர்களைச் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இக் குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்டுள்ள ஆறு பொதுமக்களில் எவருமே அடையாளம் காணப்படவில்லை என விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

இறந்தவர்களில் இருவர் முதியவர்கள். ஒருவர் பெண் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த சம்பவத்தில் காயமடைந்த 16 பேரும் கிளிநொச்சியின் பழைய வைத்திய சாலையில் இயங்கி வருகின்ற மல்லாவி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் இறந்தவர்களின் உடல்களும் அங்கு வைக்கப்பட்டுள்ளதாகவும் விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

**16 பொதுமக்கள் படுகாயம்**

விடுதலைப்புலிகளின் அரசியல் துறைச் செயலகம் மற்றும் சமாதான செயலகத் தொகுதி மீது நடத்தப்பட்ட விமானக் குண்டுத் தாக்குதலில் அந்தப் பகுதியில் வீடுகளில் இருந்தோரும் இடம்பெயருவதற்காக வீதியில் நடமாடியவர்களும் கொல்லப்பட்டும் காயமடைந்தும் உள்ளதாக விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர்.

காயமடைந்தவர்களின் விபரம் வருமாறு,

தங்கவேல் ரகு (வயது-30), சுப்பையா சிவலிங்கம் (வயது-48), இராசலிங்கம் சந்திரா (வயது-40), ஐயாத்துரை மகாலிங்கம் (வயது-55), சங்கரப்பிள்ளை ஆனந்தசிவம் (வயது- 60), சின்னக்குட்டி வேலும்மயிலும் (வயது-70),

சந்திரராஜா வினோத் (வயது-15), சிவகுருராஜா டெனிஸ் (வயது-22), மகேந்திர்ராஜா சந்திரகுமாரி (வயது-14), கருணானந்தநேசராஜா சந்திரசேனன் (வயது-24), செல்வநாயகம் கந்தசாமி (வயது-67), தேவகுருசேனன் குருகுலதேவன் (வயது -34),

சிவசற்குணராஜா சங்கரன் (வயது-27), விமலநாதன் சிவகாந்திமதி (வயது-18), தேவராஜா கருணாகரன் (வயது-21), கோகிலராஜா சண்முகதர்ஷினி (வயது-18) ஆகிய 16 பேர் இத் தாக்குதல் சம்பவத்தில் காயமடைந்து மல்லாவி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும் விடுதலைப் புலிகள் தெரிவித்தனர். (ச-5)




இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.10.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.